بسم الله الرحمن الرحيم

# ஜனாசாவும் அதனோடு சார்ந்த சட்டங்களும்

❖ மரணத்தருவாயில் இருக்கும் நோயாளி செய்யவேண்டியது

✓ அல்லாஹ்வின் ஏற்பாட்டை பொருந்திக்கொண்டு, பொறுமையுடன் இருப்பதோடு, அல்லாஹ்வைப் பற்றிய நல்லெண்ணத்துடன் இருப்பது அவசியம்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'மூ.ஃ.மினின் விடயம் ஆச்சர்யத்தக்கது, அவனது எல்லா விடயமும் அவனுக்கு நல்லதே, அது ஒரு மூ.ஃ.மினுக்கே தவிர இருக்கவும் மாட்டாது, அவனுக்கு நல்லது நடந்தால் நன்றி செலுத்துவான் அது அவனுக்கு நல்லதாகிவிடும், அவனுக்கு கெட்டது நடந்தால் பொறுமைக் காப்பான் அது அவனுக்கு நல்லதாகிவிடும்.' (முஸ்லிம்)
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் ஒருவர் அல்லாஹ்வைப் பற்றி நல்லெண்ணம் வைக்காமல் மரணிக்கவேண்டாம்.' (முஸ்லிம்)
- அல்லாஹ்வின் சந்திப்பை யார் விரும்பி விட்டாரோ, அவரது சந்திப்பை அல்லாஹ்வும் விரும்பி விடுகிறான், யார் அல்லாஹ்வின் சந்திப்பை வெறுத்து விட்டாரோ அவரது சந்திப்பை அல்லாஹ்வும் வெறுத்து விடுகிறான் (என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதும்) அல்லாஹ்வின் நபியவர்களே! மரணத்தை வெறுப்பது தானா? நாம் அனைவரும் மரணத்தை வெறுக்கிறோமே என நான் கேட்டேன். அதற்கவர்கள் அவ்வாறல்ல எனினும் மூ.ஃ.மினானவர், அல்லாஹ்வின் அருளையும் அவனின் பொருத்தத்தையும், அவனது சுவனத்தையும் கொண்டு நற்செய்தி கூறப்பட்டால் அல்லாஹ்வின் சந்திப்பை அவர் விரும்பி விடுகிறார். (அது போன்றே) அல்லாஹ்வும் அவரது சந்திப்பை விரும்பி விடுகிறான். நிச்சயமாக நிராகரிப்பவன் அல்லாஹ்வின் தண்டனை பற்றியும், அவனது கோபத்தை பற்றியும் நற்செய்தி கூறப்பட்டால் அல்லாஹ்வின் சந்திப்பை அவனும் வெறுத்து விடுகிறான். (அது போன்றே) அல்லாஹ்வும் அவனை சந்திக்க வெறுப்படைந்து விடுகிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள். (முஸ்லிம் : 454)

✓ எவ்வளவு நோய் கடுமையானாலும் மரணிப்பதை ஆசை வைக்கக்கூடாது.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் யாரும் ஏற்பட்ட ஒரு சோதனைக்காக மரணிப்பதை ஆசைவைக்கவேண்டாம், அப்படி செய்யவேண்டிய கட்டாயம் இருந்தால் அவர், اللهم أحيني ما كانت الحياة خيرا لي وتوفني إذا كانت الوفاة خيرا لي

யா அல்லாஹ் வாழ்வது எனக்கு நல்லதாக இருந்தால் என்னை வாழவை, மரணிப்பதுதான் நல்லம் என்றிருந்தால் மரணிக்கச் செய்துவிடு.' என்று கூறட்டும். (புஹாரி, முஸ்லிம்)

- ✓ மனிதர்களுக்கு ஏதும் அநியாயம் செய்திருந்தால், அல்லது உரிமைகள் செலுத்த வேண்டியிருந்தால் அவற்றை விரைவாக நிறைவேற்ற வேண்டும்.
  - ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யாராவது தன் சகோதரனின் மானத்துக்கோ, பொருளாதாரத்துக்கோ அநியாயம் இழைத்திருந்தால்,திர்ஹம் தீனர் (காசு பணம்) இல்லாத மறுமை நாள் வருமுன் அதை அவர் நிறைவேற்றிவிடட்டும், (மறுமையில்) அவருக்கு நல்லமல்கள் இருந்தால் அதை எடுதுத் அந்தப் பாதிக்கப்பட்ட மனிதருக்கு கொடுக்கப்படும், அவருக்கு நல்லமல்கள் இல்லையென்றால் அவரது (பாதிக்கப்பட்டவன்) பாவங்களை எடுத்து அநியாயம் இழைத்தவன் மீது சுமத்தப்படும்.' (புஹாரி)
  - ➢ நபி (ஸல்) அவர்கள் தோழர்களிடம் 'வங்குரோத்துக்காரன் 'முப்லிஸ்' என்றால் யார் தெறியுமா?.' என்று கேட்டார்கள்?. அதற்கு தோழர்கள் 'திர்ஹமோ, சொத்துக்களோ இல்லாதவன்' என்று பதில் அளித்தார்கள், அப்போது நபியவர்கள்; 'எனது உம்மத்தில் வங்குரோத்துக்காரன் மறுமை நாளில் தொழுகை, நோன்பு, ஸகாத் போன்றவற்றின் நன்மையோடு வருவான், அவனோ ஒருவனுக்கு ஏசியவனாக, இட்டுக்கட்டியவனாக, ஒருவனின் சொத்தை அனியாயமாக சாப்பிட்டவனாக, ஒருவனின் இரத்தத்தை ஓட்டியவனாக, ஒருவனுக்கு அடித்தவனாக வருவான்,, அப்போது பாதிக்கப்பட்டவனுக்கு அநியாயம் இலைத்தவனின் நன்மைகள் பங்கு வைக்கப்படும், நன்மைகள் முடியும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவனின் தீமைகளை எடுத்து அநியாயம் இலைத்தவனின் மீது சுமத்தப்பட்டு, பின்பு அநியாயம் இலைத்தவன் (தொழுகை, நோன்பு, ஸகாத் போன்றவற்றின் நன்மையோடு வந்தவன்) நரகில் வீசப்படுவான். ((முஸ்லிம்)
- ✓ அதில் விஷேடமாக கடன் சம்பந்தப்பட்டிருந்தால் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்,
  - ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு ஷஹீதின் கடனைத்தவிர உள்ள எல்லா பாவங்களும் மண்ணிக்கப்படுகின்றன.' (முஸ்லிம்)
- ✓ இதுபோன்ற விடயங்களை நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்தால் அவற்றை விரைவாகவே உயில் (வசீய்யத்தாக) எழுதி வைத்துவிட வேண்டும், அது கட்டாய மும்கூட.
  - ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'வசீய்யத் செய்ய விரும்பும் ஒரு முஸ்லிம், அதை எழுதி தன் தலைமாட்டில் வைத்துக்கொல்லாமல், இரண்டு இரவுகளைக்

கழிப்பது அவனுக்கு தகுந்ததல்ல.' இப்னு உமர் (றழி) கூறினார்கள் : நபியவர்களிடத்திலிருந்து இந்த செய்தியைக் கேட்டதிலிருந்து எனது வசிய்யத் என்னிடம் இல்லாமல் ஒரு இரவும் என்னைத் தாண்டியதில்லை. (புஹாரி, முஸ்லிம்)

- ✓ சொத்துக்களைப் பற்றி வசீயத் செய்வதாக இருந்தால் சொத்தில் மூன்றில் ஒரு பகுதியைத்தான் வசிய்யத் செய்ய வேண்டும், மாறாக சொத்துக்கள் அனைத்தையும் வசிய்யத் செய்யக்கூடாது.
  - ➢ ச.ஃ.த் பின் அபீ வக்காஸ் (றழி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபொழுது நபியவர்கள் நோய் விசாரிக்கச் சென்றார்கள், அப்பொது ச.ஃ.த் அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரே! எனக்கு நிறைய சொத்துக்கள் இருக்கின்றன, ஒரு பெண் பிள்ளையைத் தவிர அனந்தரக்காரர்களும் எனக்கில்லை, எனவே எனது சொத்தில் மூன்றில் இரண்டு பகுதியை வசீயத் செய்துவிடவா?' என்று கேட்க, வேண்டாம் என்று நபியவர்கள் கூற, 'அறைவாசியை வசிய்யத் செய்யவா? என்று கேட்ட போதும் வேண்டாம், என்று கூற, மூன்றில் ஒரு பகுதியில் முடியுமா? என்று கேட்டபோது, ' மூன்றில் ஒரு பகுதியை வசிய்யத் செய், அதுவும் அதிகம்தான்.' என்று கூறிவிட்டு, ' ச.ஃ.தே உனது அனந்தரக் காரர்களை மக்களிடம் கை ஏந்தும் நிலையில் விடுவதை விட வசதி வாய்ப்போடு பணக்காரர்களாக விட்டுச் செல்வது சிறந்தது,என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)
- ✓ வசிய்யத் செய்யும் போது இரண்டு சாட்சிகளை வைப்பது அவசியமாகும்.
  - ➢ ஈமான் கொண்டவர்களே! உங்களில் யாருக்கேனும் மரணம் சமீபித்து (அவர் மரணசாஸனம் கூற விரும்பினால்) அச்சமயத்தில் உங்களுக்குள் நம்பிக்கைக்குரிய இரண்டு சாட்சிகள் இருக்கவேண்டும்; அல்லது உங்களில் எவரும் பூமியில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது மரணம் சமீபித்தால் (அப்போது முஸ்லிம்களாக இரு சாட்சிகள் கிடையாவிடின்) உங்களையல்லாத வேறிருவர் சாட்சியாக இருக்கட்டும்; (இவர்கள் மீது) உங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால் இவ்விருவரையும் (அஸரு) தொழுகைக்குப் பின் தடுத்து வைத்துக் கொள்ளவும்; இவ்விருவரும் “நாங்கள் (சாட்சி) கூறியது கொண்டு யாதொரு பொருளையும் நாங்கள் அடைய விரும்பவில்லை; அவர்கள், எங்களுடைய பந்துக்களாயிருந்த போதிலும், நாங்கள் அல்லாஹ்வுக்காக சாட்சியங்கூறியதில் எதையும் மறைக்கவில்லை; அவ்வாறு செய்திருந்தால் நிச்சயமாக நாங்கள் பாவிகளாயிவிடுவோம்“ என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறவேண்டும்.

5:107. நிச்சயமாக அவ்விருவரும் பாவத்திற்குரியவர்களாகி விட்டார்கள் என்று கண்டு கொள்ளப்பட்டால், அப்போது உடைமை கிடைக்க வேண்டும் எனக் கோருவோருக்கு நெருங்கிய உறவினர் இருவர் (மோசம் செய்துவிட்ட) அவ்விருவரின் இடத்தில் நின்று: "அவ்விருவரின் சாட்சியத்தைவிட எங்களின் சாட்சியம் மிக உண்மையானது; நாங்கள் வரம்பு மீறவில்லை; (அப்படி மீறியிருந்தால்) நாங்கள் அநியாயக்காரர்களாகி விடுவோம்" என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூற வேண்டும்.

5:108. இ(வ்வாறு செய்வ)து அவர்களுடைய சாட்சியத்தை முறைப்படி, கொண்டு வருவதற்கும், அல்லது (அவர்களும் பொய்ச் சத்தியம் செய்திருந்தால்) அது மற்றவர்களின் சத்தியத்திற்குப் பின்னர் மறுக்கப்பட்டுவிடும் என்பதை அவர்கள் பயப்படுவதற்கும் இது சுலபமான வழியாகும்; மேலும், அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து (அவன் கட்டளைகளை) கவனமாய்க் கேளுங்கள் - ஏனென்றால் அல்லாஹ் பாவம் செய்யும் மக்களுக்கு நேர்வழி காட்டமாட்டான். (அல் குர் ஆன் 05: 106 - 108)

- ✓ தவராக பிழையாக வசீய்யத் செய்தால் அதை நிறைவேற்ற வேண்டிய தில்லை, இஸ்லாமிய முறைப்படி நிறைவேற்றினால் போதுமானது.
  - ➢ இம்ரான் பின் ஹுஸைன் (றழி) கூறினார்கள்: ஒரு மனிதர் மரணத் தருவாயில் (அவரிடமிருந்த) ஆறு அடிமைகளையும் உரிமையிட்டார், அவரது அனந்தரக்காரர்கள் நபிகளாரிடம் வந்து, அவர் செய்ததை முறைப்பாடு செய்தார்கள், நபியவர்கள்: 'அவர் அப்படி செய்தாரா?, அல்லாஹ்வின் நாட்டத்தினால் அதை நாம் அறிந்தால் அவருக்காக தொழுதிருக்கமாட்டோம்,'என்று கூறி விட்டு, ஆறு பேருக்கிடையிலும் துண்டு குழுக்கிப் பார்த்து, இரண்டு பேரை விடுதலை செய்துவிட்டு, நான்கு பேரை திருப்பி அடிமையாக்கினார்கள். (அஹ்மத், முஸ்லிம்)

- ✓ இன்று ஜனாசாக் கடமைகளுல் நிறையவே பித்அத்கள் நடை பெருவதனால், அவற்றை செய்யக்கூடாது என வஸிய்யத் செய்வது மிக அவசியமான ஒன்றாகும். அப்போதுதான் அவற்றை தடுக்கவும், ஒழிக்கவும் முடியும்.
  - ➢ ஸ.ஃ.த் பின் அபீவக்காஸ் (றழி) அவர்கள் மரணப்படுக்கையில் கூறினார்கள், நபிகளாருக்கு செய்யப்பட்டது போன்று எனக்காக புள்ளைக் குழி தோண்டுங்கள், என் கப்ரின் மீது கல்லை நட்டுங்கள். (முஸ்லிம்)

- ❖ நோயாளிக்குப் பக்கத்தில் உள்ளவர்கள் செய்யவேண்டியது.
  - ✓ மரணத் தருவாயில் இருக்கும் மனிதருக்கு கலிமாவை சொல்லிக்கொடுத்தல்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களில் மரணத்தருவாயில் உள்ளவருக்கு لا إله إلا الله (வணக்கத்துக்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை) கலிமாவை சொல்லிக் கொடுங்கள்.' (முஸ்லிம்)
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யார் வணக்கத்துக்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று அறிந்த நிலையில் மரணிக்கின்றாரோ அவர் சுவனம் நுளைவார்.' (முஸ்லிம்)
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் அல்லஹ்வுக்கு எதையும் இணை வைக்காத நிலையில் மரணிக்கின்றாரோ அவர் சுவனம் நுளைவார்.; (முஸ்லிம்)
  - குறிப்பு: 1- கலிமாவை அவருக்குப் பக்கத்தில் நின்று சொல்லிக் கொண்டிருக்காமல் மரணத்தறுவாயில் இருப்பவருக்கு சொல்லுமாறு ஏவுவதே நபிகளாரின் கட்டலை,
    - நபியவர்கள் தன் பெரியதந்தை அபூதாலிப் மரணத்தருவாயில் இருக்கும் போது அப்படித்தான் செய்தார்கள். (புஹாரி)
    - மேலும் ஒரு யூதச் சிருவன் மரணத்தறுவாயில் இருக்கும் போதும் அவர் மூ.ஃ.மினாவதற்கான முயற்சியில்தான் ஈடுபட்டார்கள். (புஹாரி)

    2- மரணத்தறுவாயில் இருக்கும் ஒருவருக்குப் பக்கத்தில் யாசீன் சூராவை ஓதுவதற்கும் ஸஹீஹான ஹதீஸ்கள் வரவில்லை, மாராக,'உங்களில் மரணத்தருவாயில் உள்ளவருக்கு சூரா யாசீனை ஓதுங்கள்.' என்று வரும் ஹதீஸ் பலவீனமானது.

    3- மரணத்தறுவாயில் இருப்பவரை கிப்லா திசையை நோக்கி வைப்பது இன்று வழமையாக இருக்கின்றது, ஆனால் அதைக் கட்டாயப்படுத்தி எந்த ஸஹிஹான ஹதீஸ்களும் வரவில்லை என்பதும் முக்கிய அம்சமாகும்.

❖ நோயாளி மரணித்த பின் பக்கத்தில் உள்ளவர்கள் செய்யவேண்டியவை,

✓ மரணித்த பின் கண்ணைகளை மூடி விடுவதும், அவருக்காக நபிகளார் ஓதிய துஆவை ஓதுவதும் முக்கியமாகும்.

- அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அபூஸலமா (மரணத்தருவாயிலிருந்த போது)விடம் நுழைந்(அருகில் வந்)தார்கள். அவரது பார்வை மேல் நோக்கி விட்டது. ஆகவே அதை ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் மூடினார்கள். அதன்பிறகு "நிச்சயமாக உயிர் கைப்பற்றப்பட்டு விட்டால் பார்வை அதை தொடர்கிறது" எனக்கூறினார்கள். (உடனே) அவர் குடும்பத்தவர்களிலுள்ள மக்கள் பெரும் சப்தமிட்டனர். அப்போது (உங்களுக்காக) நலவானவற்றைக்

கொண்டே தவிர துஆ செய்யாதீர்கள், ஏனெனில் அமரர்கள் உங்களது கூற்றுக்கு (அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளுமாறு) ஆமீன் கூறுகிறார்கள் எனக்கூறினார்கள்.

اللهم اغفر لابي سلمة، وارفع درجته في المهديين، واخلفه في عقبه في الغابرين، واغفر لنا وله يا رب العالمين، وافسح له في قبره، ونور له

(அல்லாஹும்மGfபிர் லிஅபீ ஸலமா, வர்fபஹ் தரஜதஹு fபில் மஹ்தியீன், வ அக்லிfப்ஹு fபீ அகிபிஹீ fபில் Gகாபிரீன், வGக்fபிர் லன வலஹு யா ரப்பல் ஆலமீன், வfப்ஸஹ் லஹு fபீ கப்ரிஹீ, வனவ்விர் லஹு fபீஹி)

அதன்பிறகு "யா அல்லாஹ்! அபூஸலாமாவிற்கு பாவமன்னிப்புச் செய்வாயாக நேர்வழி பெற்றவர்களில் அவரது தரத்தை உயர்த்துவாயாக. மீதமிருப்பவர்களில் அவருக்குப்பிறகு அவரை (இழந்தற்குரிய) பகரத்தை நல்குவாயாக அகிலங்களின் இரட்சகனே! எங்களுக்கும் அவருக்கும் பாவமன்னிப்புச் செய்வாயாக அவரது கப்ரில் அவருக்கு விஸ்தீரனத்தை நல்கி அதில் ஒளியை ஆக்குவாயாக" எனக்கூறினார்கள். அறிவிப்பவர் : உம்மு ஸலமா ரளியல்லாஹு அன்ஹா (முஸ்லிம் : 456)

- ✓ முகத்தையும் தலையையும் மூடிவிட முடியும், ஆனால் மரணித்தவர் இஹ்ராம் கட்டிய நிலையில் இருந்தால் முகம் தலையை மூடக்கூடாது.
  - ➢ ஹஜ்ஜின்போது அரபாவில் ஒட்டகத்தில் இருந்த ஒருவர் விழுந்து, அவரை அது மிரித்துவிட்டது, (அவர் மரணித்து விட்டார்) நபியவர்கள் கூரினார்கள்: 'அவரை நீராலும், இலந்தை இலையைக் கொண்டும் குளிப்பாட்டி, அவரது இரு ஆடைகளிலும் அவரை கபனிடுங்கள், அவருக்கு நறுமணம் பூசவோ, தலை, முகத்தை மூடவோ வேண்டாம், ஏனெனில் அவர் தல்பியா கூறிய நிலையிலேயே எழுப்பப்படுவார்.' என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)
- ✓ மரணித்தவரை தயார் செய்து, அவரை முடியுமான அளவு அவசரமாக அடக்கம் செய்வதற்காக வீட்டை விட்டு வெளியேற்றல்.
  - ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஜனாசாவை அவசரப் படுத்துங்கள்.' (புஹாரி)
    - குறிப்பு: தேவை ஏற்பட்டால் ஜனாசாவை வீட்டில் தாமதப் படுத்தவும் முடியும். அப்படி செய்யக் கூடாது என இரண்டு ஹதீஸ்கள் வந்துள்ளன இரண்டும் மிகவும் பலவீனமானவை. அதே நேரம் உம்மு ஸுலைம் அவர்களின் மகன் மரணித்தபோது முழு இரவும் அது வீட்டில் வைக்கப்படுகின்றது, அதை நபிகளார் கண்டிக்கவுமில்லை, தடுக்கவுமில்லை.
  - ➢ அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவித்தார். அபுதல்ஹா(ரலி)வின் மகன் நோயுற்றிருந்தார். ஒரு நாள் அபுதல்ஹா(ரலி) வெளியே சென்றிருந்தபோது குழந்தை இறந்துவிட்டது. இதைக் கண்ட அபூ தல்ஹா(ரலி)வின் மனைவி உடனே கொஞ்சம் உணவைத் தயார் செய்தார். பிறகு மய்யித்தை வீட்டின் ஒரு மூலையில் வைத்தார். வெளியே சென்றிருந்த அபூ தல்ஹா(ரலி) வீடு திரும்பிய உடன் மகன்

எவ்வாறுள்ளான்? எனக் கேட்டார் அதற்கு அவரின் மனைவி 'அமைதியாகிவிட்டான்; நிம்மதி (ஓய்வு) பெற்று விட்டிருப்பான் என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு" என பதிலளித்தார். அபூ தல்ஹா(ரலி) தம் மனைவி கூறியது உண்மைதான் என்றெண்ணி (நிம்மதியுடன்) தம் மனைவியோடு இரவைக் கழித்தார். பொழுது விடிந்து குளித்துவிட்டுத் (தொழுகைக்காக) வெளியே செல்ல நாடியபோது மகன் இறந்துவிட்டதை மனைவி கூறினார். அபூ தல்ஹா நபி(ஸல்) அவர்களோடு தொழுதுவிட்டுத் தம் வீட்டில் நடந்த சம்பவத்தை அவர்களிடம் கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'இந்த இரவு நடந்தவற்றில் அல்லாஹ் உங்கள் இருவருக்கும் அபிவிருத்தி செய்யக்கூடும்" என்றார்கள். இருவருக்கும் ஒன்பது குழந்தைகள் இருப்பதை பார்த்தேன். அவர்கள் அனைவரும் குர்ஆனை ஓதுபவர்களாக இருந்தனர் என மதீனாவைச் சேர்ந்த அன்சாரிகளில் ஒருவர் கூறினார். (புஹாரி : 1301.)

- 'உங்களில் ஒருவர் மரணித்துவிட்டால் அவரை (வீட்டில்) தடுத்து வைக்காதீர்கள், அவரை கப்ருக்கு விரைவாக எடுத்துச் செல்லுங்கள், அவரது தலை மாட்டில் பகரா சூராவின் ஆரம்பத்தையும், கால் மாட்டில் அதன் கடைசிப் பகுதியையும் ஒதுங்கள்.' (தபரானி, மிகவும் பலவீனமானது)
- தல்ஹதுப்னுல் பரா என்ற தோழர் மரணித்த போது, நபிகளார் 'அவரை அடக்குவதை அவசரப்படுத்துங்கள், ஏனெனில் ஒரு முஸ்லிமின் சடலத்தை குடும்பத்தவர்கள் மத்தியில் வைத்திருப்பது ஆகுமானதல்ல.' என்று கூறினார்கள். ((அபூ தாவுத், பைஹகி, இதுவும் பலவீனமானது)

✓ மரணிக்கும் அதே ஊரிலே அடக்கம் செய்யவேண்டு, அவசியத் தேவைக்கே அன்றி வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் கூடாது.

- ஜாபிர் (றழி) கூறினார்கள்: உஹது யுத்த முடிவின் போது, அதில் உயிர் நீத்தவர்களை பகீஇல் அடக்குவதற்காக தூக்கிச் செல்லப்பட்டார்கள், அப்போது நபிகளாரின் ஒரு அளைப்பாளர், 'மரணித்தவர்களை அந்த இடங்களிலே அடக்குமாறு அல்லாஹ்வின் தூதர் ஏவுகின்றார்கள், என்று கூறினார், நானோ எனது தாயையும், மாமாவையும் பகீஇல் அடக்குவதற்காக ஒட்டகத்தின் இரு பக்கங்களிலும் கட்டிவிட்டேன்,எல்லோரும் உஹதிலேயே அடக்க, நானும் அவர்களை அவர்களோடே அடக்கினேன். (அபூ தாவுத், திர்மிதி, நஸாஇ..)

✓ ஜனசாவை பார்ப்பதும், முத்தமிடுவதும் ஆகுமானதே. அதற்காக மூன்று நாளைக்கு கண்ணீர் வடிக்கவும் முடியும்.

- ஆயிஷா(ரலி) கூறினார்கள்" நபி(ஸல்)அவர்களின் மரணச் செய்தியைக் கேள்விப்பட்ட) அபூ பக்ர்(ரலி) ஸுன்ஹ் என்னும் இடத்திலுள்ள தம் வீட்டிலிருந்து குதிரையில் மஸ்ஜிது(ன்னபவீ)க்கு வந்திறங்கி, யாரிடமும் பேசாமல் நேரடியாக என் அறைக்குள்

நுழைந்தார். அங்கு நபி(ஸல்) அவர்களை அடையாளமிடப்பட்ட போர்வையால் போர்த்தப்பட்ட நிலையில் கண்டார். உடனே, அபூ பக்ர் (ரலி) நபி(ஸல்) அவர்களின் முகத்திலிருந்த துணியை அகற்றிவிட்டு, அவர்களின் மேல் விழுந்து முத்தமிட்டு விட்டு, அழுதார். பின்பு, 'இறைத்தூதர் அவர்களே! என்னுடைய தந்தையும் தாயும் தங்களுக்கு அர்ப்பணம். அல்லாஹ் தங்களுக்கு இரண்டு மரணங்களை ஏற்படுத்தவில்லை. உங்களின் மீது விதிக்கப்பட்ட அந்த மரணத்தை தாங்கள் அடைந்து விட்டீர்கள்' என்று கூறினார். . (புஹாரி : 1241.)

- .ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார். தந்தை கொல்லப்பட்டுக் கிடந்தபோது நான் அவரின் முகத்தின மீதிருந்த துணியை அகற்றிவிட்டு அழுதேன். அப்போது (அங்கிருந்தவர்கள்) என்னைத் தடுத்தார்கள். ஆனால், நபி(ஸல்) அவர்கள் என்னைத் தடுக்கவில்லை. பிறகு என்னுடைய மாமி ஃபாத்திமா(ரலி)வும் அழ ஆரம்பித்துவிட்டார். அப்போது, 'நீங்கள் அழுதாலும் அழாவிட்டாலும் நீங்கள் அவரைத் தூக்கும் வரை வானவர்கள் அவருக்குத் தங்களின் இறக்கைகளால் தொடர்ந்து நிழல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்." என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி : 1244 முஸ்லிம். அஹ்மத்)
- அனஸ் (ரலி) அறிவித்தார். நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் (அவர்களின் மகன் இப்ராஹீம் வளர்ந்து வந்த) அபூ ஸைஃப் என்ற கொல்லரின் வீட்டிற்குச் சென்றோம். அவர் இப்ராஹீமின் பால்குடித் தாயாருடைய கணவராவார். நபி(ஸல்) அவர்கள் இப்ராஹீமைத் தூக்கி முகர்ந்து முத்தமிட்டார்கள். மற்றொரு முறை நாங்கள் வீட்டினுள் நுழைந்தோம். அப்போது இப்ராஹீமின் உயிர் பிரிந்து கொண்டிருந்தது. நபி(ஸல்) கருணையாகும்" என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்து அழுதார்கள். பிறகு, 'கண்கள் நீரைச் சொரிகின்றன அவர்களின் கண்கள் நீரைப் பொழியலாயின. இதைக்கண்ட அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) 'இறைத்தூதர் அவர்களே! தாங்களா (அழுகிறீர்கள்)?' எனக் கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள், 'அவ்ஃபின் மகனே! நிச்சயமாக இது உள்ளம் வாடிக் கொண்டிருக்கிறது; எனினும், இறைவன் விரும்பாத எந்த வார்த்தையையும் நாங்கள் கூற மாட்டோம். இப்ராஹீமே! நிச்சயமாக நாங்கள் உன்னுடைய பிரிவால் அதிகக்கவலைப்படுகிறோம்" என்றார்கள். . (புஹாரி : 1303.)
- உஸாமா இப்னு ஸைத்(ரலி) அறிவித்தார். மகன் மரணத் தருவாயில் இருப்பதால் உடனே வரும்படி நபி(ஸல்) அவர்களின் மகள் (ஜைனப்(ரலி) நபியவர்களுக்குச் செய்தியனுப்பினார். நபி(ஸல்) அவர்கள், தம் மகளுக்கு ஸலாம் கூறி அனுப்பியதோடு, 'எடுத்ததும் கொடுத்ததும் அல்லாஹ்வுக்குரியதே! ஒவ்வொன்று க்கும் அவனிடம் ஒரு குறிப்பிட்ட தவணையுண்டு. எனவே பொறுமையைக் கைக்கொண்டு நன்மையை எதிர்பாரும்!" என்றும் கூறி அனுப்பினார்கள். அப்போது

அவர்களின் மகள் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு, கண்டிப்பாக வரவேண்டும் எனக் கூறியனுப்பினார். உடனே நபி(ஸல்) அவர்கள் எழுந்தார்கள். அவர்களுடன் ஸஅத் இப்னு உபாதா, முஆத் இப்னு ஜபல், உபை இப்னு கஃபு, ஸைத் இப்னு ஸாபித்(ரலி) ஆகியோரும் மற்றும் பலரும் எழுந்தனர். சென்ற) நபி(ஸல்) அவர்களிடம், சுவாசிக்க முடியாமல் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் குழந்தையைக் காட்டினார்கள்.. இற்றுப்போன பழைய தோற் துருத்தி போல் குழந்தையின் மார்பு ஏறி இறங்கியது. நபி(ஸல்) அவர்களின் கண்கள் நீர் சொரிந்தன. 'இறைத்தூதர் அவர்களே! என்ன இது? (அழுகிறீர்கள்) என ஸஃத்(ரலி) கேட்டதற்கு நபி(ஸல்), 'இது அல்லாஹ் தன் அடியார்களின் உள்ளங்களில் ஏற்படுத்திய இரக்க உணர்வாகும். நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களில் இரக்கமுடையவர்க்கே இரக்கம் காட்டுகிறான்" என்றார்கள். . (புஹாரி : 1284)

- அப்துல்லாஹ் பின் ஜஃபர் (றழி)கூறினார்கள்: நபியவர்கள் ஜஃபர் அவர்களின் குடும்பத்தினரிடம் மூன்று நாட்கள் வரவில்லை, பிறகு அவர்களிடம் வந்த நபியவர்கள் 'இன்றைய தினத்துக்குப் பிறகு என் சகோதரருக்காக நீங்கள் அழவேண்டாம்.' என்று கூறினார்கள். (அபூ தாவுத், நஸாஇ)

❖ குடும்ப உறவுகள் செய்யவேண்டியது:

✓ மரண செய்தி கேள்விப்பட்ட உறவினர்கள் பொருமையாக இருப்பது முதற் கடமையாகும்.

- நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம்; ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!. (பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்" என்று கூறுவார்கள். இத்தகையோர் மீது தான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன, இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள். (அல்குர் ஆன்: 2:155 ,157)
- கப்ரிடத்திலிருந்து அழுதுகொண்டிருக்கும் ஒரு பெண்ணுக்கருகாமையால் நபியவர்கள் நடந்து சென்றபோது 'அல்லாஹ்வைப் பயந்து, பொருமையாக இரு' என்று கூறினார்கள். அவர் நபியென்று அறியாத அந்தப் பெண் ' எனக்கு ஏற்பட்ட சோதனை உமக்கு ஏற்படவில்லை, தூரப் போய்விடும், என்று கூறினார், பின்னர் அவர் நபிகளார் என்று அந்தப் பெண்ணிடம் கூறப்பட்டபோது, அவள் நபிகளாரின்

வீட்டுக்கு வந்து முறைப்பாடு செய்த போது, நபியவர்கள் : 'பொருமை என்பது முதல் கட்டத்தில் வரவேண்டியது.' என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

- ✓ பிள்ளைகளை இழந்து பொருமைக் காப்பது மிகவும் சிறப்புக்குறியதே.
  - ➢ நபியவர்கள்: 'எந்தப் பெண்ணாவது மூன்று (வயதுக்கு வராத) பிள்ளைகை இழந்து, (அதற்கு பொருமையாகவும் இருந்தால்) அந்தப் பிள்ளைகள் நரகத்துக்குத் தடடையாக இருப்பார்கள்.' என்று கூறியபோது, ஒரு பெண்மனி, 'இரண்டிருந்தாலுமா?' என்று கேற்க, 'இரண்டிருந்தாலும் தான்.' என்று கூரினார்கள். (புஹாரி, முஸ்லிம், நசாஇ)
- ✓ மரணச்செய்தி கேள்விப்படுபவர்கள் 'இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன், அல்லாஹும்மஃஜுர்னீ fFF முஸீபதீ வஅஹ்லிfலீ கைரன் மின்ஹா.' என்று கூற வேண்டும்.
  - ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்: 'ஒரு முஸ்லிமுக்கு ஒரு சோதனை ஏற்படும் போது, அல்லாஹ் ஏவிய (إنا لله وإنا إليه راجعون) என்பதையும், (اللهم اجرني في مصيبتي وأخلف لي خيرا منها) (இறைவா எனது சோதனையில் கூலியைத் தந்து, அதைவிட சிறந்ததை எனக்கு தருவாயாக) என்பதையும் கூறினால், அதைவிட சிறந்ததை அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுப்பான். (முஸ்லிம், அஹ்மத்)
- ✓ மூன்று நாற்களுக்கு மேல் மையித்துக்காக கவலைப்படுவது கூடாது. ஆனால் ஒரு பெண்மனிக்கு தன் கனவனுக்காக நான்கு மாதம் பத்து நாட்கள் கவலைப் படுவது கடமையாகும்.
  - ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்: 'அல்லாஹ்வையும் மருமை நாளையும் நம்பிய எந்தப் பெண்ணும் ஒரு மையித்துக்காக மூன்று நாற்களுக்கு மேல் கவலை தெறிவிப்பது ஆகுமாகமாட்டாது, ஆனால் கனவனுக்காக ஒரு பெண் நான்கு மாதம் பத்து நாட்கள் கவலைப் படுவதைத்தவிர.' (புஹாரி)
  - ➢ முஹம்மத் இப்னு ஸிரீன் அறிவித்தார். மகன் இறந்த மூன்றாம் நாள் உம்மு அதிய்யா(ரலி) மஞ்சள் நிறவாசனைப் பொருளைப் பூசினார். மேலும், 'கணவனைத் தவிர வேறு யாருக்காகவும் மூன்று நாள்களுக்கு மேல் துக்கம் கடைப்பிடிக்கக் கூடாது என்று நாங்கள் தடுக்கப்பட்டிருந்தோம்' என்றும் கூறினார்கள். (புஹாரி: 1279)
    - குறிப்பு: ஒரு மனிதன் மையித்துக்காக கவலை தெறிவிக்காமல் இருந்தாலும் குற்றமில்லை. உம்மு ஸுலைம் (றழி) அவர்கள் தம் பிள்ளையின் மரனத் திற்காக பொறுமையாக இருந்து, தன் கனவரோடு நடந்து கொண்டவிதமும், அதற்காக நபியவர்கள் பிறார்த்தனை செய்ததும் அதற்கு ஒரு ஆதாரமாகும், (முஸ்லிம்)

❖ மரணச்செய்தி கேள்விப்பட்டால் செய்யக்கூடாத காரியங்கள்:

1. ஒப்பாரி வைத்தல்
2. கன்னத்தில் அறைந்துகொள்ளுதல், ஆடைகளைக் கிழித்துக்கொள்ளல்.
3. முடிகளை வழித்தல்.
4. கவலைக்காக முடியை வளர்த்தல்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்:‘எனது உம்மத்தில் நான்கு காரியங்கள் அறியாமைக்கால காரியங்களில் உள்ளவையாகும். அவைகளை அவர்கள் விடமாட் டார்கள். (அவையாவன) வம்சா வழியைக் கூறி பெருமைப்படுதல், மனிதர்கள் (உயர்வான குடும்பப்) பாரம்பரியங்களை குறை கூறுதல், நட்சத்திரங்களைக் கொண்டு மழைப் பெய்யத் தேடுதல், (ஒப்பாரியிட்டு) ஓலமிட்டு அழுதல் (முதலியவைகளாகும்). “ஒலமிட்டு அழும் பெண் அவள் மரணத்திற்கு முன்பு தவ்பாச் செய்யவில்லையாயின் மறுமை நாளில் அவளை(க் கொண்டுவந்து) நிறுத்தப்படும். அவள்மேல் தாரினால் வார்க்கப்பட்ட சட்டையும் சொரிக் கவசமும் (அணிவிக்கப்பட்டு) இருக்கும்.” என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபுமாலிக் அல் அஷ்அரி (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.. ’ (முஸ்லிம்: சகூஈ)
- நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்: ‘மக்களிடத்தில் குப்ரை உண்டாக்கும் இரண்டு விடயங்கள் இருக்கின்றன, வம்சத்தில் குறைகூறுவது, மய்யித்துக்காக ஒப்பாரி யிடுவது.’ (முஸ்லிம்)
- உம்மு அதீய்யா (றழி) கூறினார்கள் நபியவர்கள் எங்களிடம் பைஅத் உறுதி மொழி எடுக்கும்போது ஒப்பாரியிடாமல் இருப்பதையும் பைஅத் செய்தார்கள். மேலும் ஐந்து பேரைத் தவிர வேறு எந்தப் பெண்ணும் அதை நிறைவேற்றவில்லை, உம்மு ஸுலைம், உம்முல் அழா, முஆத் அவர்களின் மனைவி, அபூ ஸுப்ராவின் மகள் ஆகியோராவார்கள். (புஹாரி, முஸ்லிம்)
  - ஒப்பாரியிடுவது சம்பந்தமாக நிறைய ஹதீஸ்களில் எச்சரிக்கை வந்துள்ளது.
- நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்: ‘ யார் கன்னத்தில் அறைந்து, ஆடைகளை கிழித்து, ஜாஹிலீயாக்கால வார்த்தைகளைக் கூறுகின்றார்களோ அவர்கள் எங்களை சார்ந்தவர்கள் அல்ல.’ (புஹாரி, முஸ்லிம்)
- அபூ புர்தா இப்னு அபீ மூஸா அறிவித்தார். (என்தந்தை) அபூ மூஸா தம் கடுமையான மரண வேதனையால் மயக்கமடைந்துவிட்டார். அவரின் தலை அவரின் மனைவியின் மடியில் இருந்தது. (தம் மனைவியின் எந்தப் பேச்சுக்கும்) அவரால் பதில் சொல்ல முடியவில்லை. பின்பு மயக்கம் தெளிந்தபோது, 'நிச்சயமாக நபி(ஸல்) அவர்கள் (துன்பத்தின் போது) அதிகச் சப்தமிட்டு அழும் பெண்ணைவிட்டும் மொட்டையடித்துக் கொள்ளும் பெண்ணைவிட்டும் ஆடைகளைக்

கிழித்துக் கொள்ளும் பெண்ணைவிட்டும் தம்மை விலக்கினார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தம்மைவிலக்கிக் கொண்டவரிடமிருந்து நானும் விலகிக்கொள்கிறேன்" என்று கூறினார். (புஹாரி: கஉகூகூ, முஸ்லிம்)

- உறுதி மொழி எடுத்த ஒரு பெண் கூறினார்கள்: 'நபியவர்கள் எடுத்த உறுதி மொழியில் அவர்களுக்கு மாறு செய்யாமலிருப்பதும், முகத்தில் முடி புடுங்காமலிருப்பதையும், சாபத்தை வேண்டாமலிருப்பதையும், ஆடையை கிழிக்காமலிருப்பதையும், தலைவிரிகோலமாக இருக்காமலிருப்பதையும் உறுதி மொழியாக எடுத்தார்கள்.' (அபோதாவூத், பைஹகி)

✓ மரணச் செய்தியை அறிவிப்புச் செய்தல்.

- ஆபூ ஹுரைரா (றழி) கூறினார்கள்: நபியவர்கள் நஜாஷி மன்னர் மரணித்த தினத்தன்று மரனச் செய்தி அரிவித்தார்கள், முஸல்லாவுக்குச் சென்று, அவர்களை ஸப்பில் நிறுத்தி, நான்கு தக்பீர்கள் சொல்லி (ஜனாசா தொழுகை நடாத்தினார்கள்.) (புஹாரி, முஸ்லிம்)

❖ கடைசி முடிவு நல்லதாக இருப்பதற்கான அடையாளங்கள்:

✓ கலிமாவைக் கூறிய நிலையில் மரணித்தல்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யாருடைய கடைசி வார்த்தை 'لا إله إلا الله வணக்கத்துக்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை' என்பதாக இருக்குமோ அவர் சுவனம் நுளைவார்.' (ஹாகிம்)
- நபி (ஸல்) அவர்கள் தம் பெரிய தந்தை அபூ தாலிப் அவர்கள் மரணிக்கும் தருனத்தில் 'என் பெரியத் தந்தையே لا إله إلا الله என்று கூறுங்கள் உங்களுக்காக அல்லாஹ்விடம் பேசுகின்றேன்.' என்று கூறினார்கள். (புஹாரி)

✓ யுத்தக் களத்தில் ஷஹீதாக மரணித்தல்.

- யுத்தக் களத்தில் கொல்லப்பட்டவர்களை மரணித்தவர்களாக எண்ணாதீர்கள், மாறாக அவர்கள் அல்லாஹ்விடத்தில் உணவளிக்கப்படும் நிலையிலும், அல்லாஹ் அவர்களுக்கு செய்த சிறப்புகளைவைத்து சந்தோசப்படும் நிலையிலும் உயிரோடு இருக்கின்றனர். (அல் குர் ஆன் 3:169)
- நபி (ஸல்) அவர்கள் நபித்தோழர்களிடம் 'உங்களில் ஷஹீதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?' என்று கேட்க, அல்லாஹ்வின் தூதரே அல்லாஹ்வின் பாதையில் கொலை செய்யப்பட்டவரே ஷஹீத்' என்று கூறினார்கள், அப்போது நபியவர்கள், 'அப்படியென்றால் என் உம்மத்தில் ஷஹீத்கள் குறைந்துவிடுவார்கள்.' என்று கூறியபோது, அல்லாஹ்வின் தூதரே அவர்கள் யார்? என்று நபித்தோழர்கள் கேட்க, 'அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர் ஷஹீதாவார்,'அல்லாஹ்வின் பாதையில் மரணித்தவர் ஷஹீதாவார்,யார் பிலேக் நோயினால் மரணித்தாரோ

அவர் ஷஹீதாவார், வயிற்றுப் போக்கில் மரணித்தவரும், நீரில் மூழ்கி மரணித்தவரும் ஷஹீதாவார்.' என்று கூறினார்கள். (முஸ்லிம், அஹ்மத்)

- ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'பிலேக் நோய் என்பது அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு தண்டனையாக அனுப்புகின்றான், அதை மூஃமீன்களுக்கு ரஹ்மத்தாகவும் ஆக்கிவிடுகின்றான். எனவே ஒரு அடியானுக்கு பிலேக் நோய் ஏற்பட்டு, அவன் அல்லாஹ் நாடியதுதான் நடக்கும் என்று நினைத்தவனாக, தனது ஊரில் பொறுமையாக இருந்தால் அவனுக்கு ஷஹீதுடைய கூலி கிடைக்கும்.' (புஹாரி, அஹ்மத்)
- ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஷஹீதுகள் ஐந்து பேராவார்கள்; பிலேக் நோயினால் பாதிகப்பட்டவன், வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டவன், இடிபாடுகளுக்குள் சிக்குண்டவன், அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீத்தவன்.' (புஹாரி , முஸ்லிம்)

✓ சொத்துக்களைப் பாதுகாக்க போராடுவது,

- ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் தன் சொத்துக்களைப் பாதுகாக்கச் சென்று கொல்லப்படுகின்றாரோ அவர் ஷஹீதாவார்.' (புஹாரி, முஸ்லிம்)
- ➢ நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! ஒரு மனிதன் எனது சொத்தை சூரையாட வந்தால் நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்க, நபியவர்கள்: அவனுக்கு நீ கொடுக்காதே' என்றார்கள், அதற்கு அந்த மனிதர், அவன் என்னோடு சண்டைக்கு வந்தால் என்ன செய்வது எனக் கேட்க, நீயும் அவனோடு எதிர் யுத்தம் செய், என்று நபியவர்கள் கூற, அவன் என்னை கொன்றுவிட்டால் என்ன நிலை என்று திருப்பிக் கேட்க, 'அப்படி நடந்தால் நீ ஷஹீதாவாய்' என்று கூரினார்கள் நபியவர்கள்....(முஸ்லிம்)
- ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யார் தன் சொத்தின் காரணமாகவும், குடும்பத்திற்காகவும், மார்கத்துக்காகவும், உயிருக்காகவும் கொல்லப்படுகின்றாரோ அவர் ஷஹீதாவார்.' (அபூ தாவுத், திர்மிதி)

✓ நெற்றியில் வியர்வை உள்ள நிலையில் மரணித்தல்

- ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'மூஃமினின் மரணம் நெற்றியில் வியர்வை இருப்பது கொண்டு ஏற்படும்.' (அஹ்மத், திர்மிதி, நசாஇ)
    - குறிப்பு: இந்த ஹதீஸ் பல வழிகளில் வருவதன் மூலம் ஸஹீஹ் என்ற தரத்தை அடைவதாக ஹதீஸ் கலை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.
    - வெள்ளிக்கிழமை மரணித்தால் கப்ருடைய வேதனையிலிருந்து பாதுகாக் கப்படுவார் என அஹ்மதில் வரும் ஹதீஸ் எல்லா வழிகளிலும் பலவீனமானது.

❖ ஒரு ஜனாசாவை மக்கள் புகழுதல்

- ✓ மக்களின் நாவுகளிலிருந்து தூய்மையுடன் வெளிப்படும் நல்ல வார்த்தைகளை வைத்து ஒரு ஜனாசா அல்லாஹ்விடத்தில் அந்தஸ்தை அடைகின்றது, இதில் கவனிக்கவேண்டிய விடயம் அல்லாஹ் உள்ளத்தையே பார்க்கின்றான். உள்ளத்தில் ஒன்றை வைத்து, வெளிப்பகட்டுக்காக புகழ்வது வெறும் முஹஸ்துதியாகவே கணிக்கப்படும். அடுத்து ஒரு மனிதன் உலகில் வாழும் ஒவ்வொரு வினாடியும் மரணத்தை எதிர்பார்த்து மக்கள் அபிமானியாக வாழவும் வேண்டும், அப்போதே கடைசி முடிவு நல்லதாகவும் அமையப் போகின்றது.
  - ➢ அனஸ் (றழி) கூறினார்கள்: நபிகளாருக்குப் பக்கத்தால் ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டது, அதை மக்கள் புகழ்ந்து, அவர் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நேசிப்பவராக இருந்தார் என்று கூறினர், நபிகளார் 'கடமையாகிவிட்டது, கடமையாகிவிட்டது, கடமையாகிவிட்டது' என்று கூறினார்கள், மேலும் நபிகளாருக்குப் பக்கத்தால் ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டது, அதை மக்கள் இகழ்ந்து, அவர் அல்லாஹ்வின் மார்க்க விடயத்தில் கெட்டவராக இருந்தார் என்று கூறினர், நபிகளார் 'கடமையாகிவிட்டது கடமையாகிவிட்டது, கடமையாகிவிட்டது' என்று கூரினார்கள், அப்போது உமர் (றழி) அவர்கள் விளக்கம் கேட்டபோது, நபியவர்கள்: 'நீங்கள் புகழ்ந்த அந்த மனிதருக்கு சுவனம் கடமையாகிவிட்டது, நீங்கள் இகழ்ந்த மனிதருக்கு நரகம் கடமையாகி விட்டது, நீங்களே பூமியில் அல்லாஹ்வின் சாட்சிகள், நீங்களே பூமியில் அல்லாஹ்வின் சாட்சிகள், நீங்களே பூமியில் அல்லாஹ்வின் சாட்சிகள்.' என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)
  - ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எந்த முஸ்லிமுக்காவது நான்கு பேர் நல்லதைக் கூறினால், அல்லாஹ் அவனை சுவனத்தில் நுளைவிப்பான்.' அப்போது நபித்தோழர்கள் 'மூன்று பேரின் சாட்சியைப் பற்றியும், இரண்டு பேரின் சாட்சியைப் பற்றியும் கேட்டனர்,' நபிகளார் அவர்களது சாட்சியும் தான் என்றார்கள். பிறகு ஒருவரின் விடயத்தில் தோழர்கள் கேட்கவில்லை. (புஹாரி)
  - • குறிப்பு: இந்த ஹதீஸ்களில் மக்கள் தானகவே புகழ்ந்தார்கள் என்பது தெளிவாக விளங்குகின்றது, நபிகளார் கருத்துக் கேட்கவில்லை என்பதையும் விழங்கி நடக்கவேண்டும்.
- ✓ சூரிய சந்திர கிரகணங்களின் போது மரணிப்பது அல்லாஹ்வின் ஏற்பாடே தவிர அதில் எந்த சிறப்பும் இல்லை.
  - ➢ முகீரா இப்னு ஷுஉபா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்களின் காலத்தில் (அவர்களின் மகன்) இப்ராஹீம்(ரலி) மரணித்த அன்று சூரிய கிரகணம் ஏற்பட்டது. இப்ராஹீமின் மரணத்திற்காகவே சூரிய கிரகணம் ஏற்பட்டதாக மக்கள் பேசிக் கொண்டனர். அப்போது நபி(ஸல்) அவர்கள் 'சூரியனுக்கும் சந்திரனுக்கும் எவருடைய

மரணத்திற்காகவோ எவருடைய வாழ்வுக்காகவோ கிரகணம் பிடிப்பதில்லை. எனவே நீங்கள் (ம்ரகணத்தைக்) கண்டால் தொழுது அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்' என்று கூறினார்கள். (புஹாரி: க0சஈ)

- ✓ மரணித்தவரகளை புகழும் போது சுவனவாதி என்றோ, குறைகூறும் போது நரகவாதி என்று இகழவோ கூடாது. பொதுவாகவே ஒரு மனிதரை குறிப்பிட்டு தீர்ப்பு வழங்கக்கூடாது.
  - ➢ நபி(ஸல்) அவர்களிடம் பைஅத் செய்திருந்த அன்சாரிப் பெண்மணியான உம்முல் அலா(ரலி) அறிவித்தார். வந்த) முஹாஜிர்களில் யார் யாருடைய வீட்டில் தங்குவது என்பதையறிய சீட்டுக் குலுக்கிப் போட்டுக் கொண்டிருந்தபோது உஸ்மான் இப்னு மழ்வூன்(ரலி) எங்கள் வீட்டில் தங்குவது என முடிவானது. அதன்படி அவரை எங்கள் வீட்டில் தங்க வைத்தோம். பிறகு அவர் நோயுற்று மரணமடைந்தார். அவரின் உடல் குளிப்பாட்டப்பட்டு அவரின் ஆடையிலேயே கஃபனிடப்பட்டதும் நபி(ஸல்) அவர்கள் அங்கு வந்தார்கள். நான் (உஸ்மானை நோக்கி), 'ஸாயிபின் தந்தையே! உம் மீது இறையருள் உண்டாகட்டும்! அல்லாஹ் உம்மைக் கண்ணியப்படுத்தியுள்ளான் என்பதற்கு நான் சாட்சி கூறுகிறேன்' எனக் கூறினேன். உடனே, நபி(ஸல்) அவரை அல்லாஹ் கண்ணியப்படுத்தியுள்ளான் என்பது உனக்கெப்படித் தெரியும்?' என்று கேட்டார்கள். அல்லாஹ்வின்தூதர் அவர்களே! என்னுடைய தந்தை உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். பின் யாரைத்தான் அல்லாஹ் கண்ணியப்படுத்துவான்?' என கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், 'இவர் மரணமடைந்துவிட்டார். எனவே, அல்லாஹ்வின் மீது ஆணையாக! இவர் விஷயத்தில் நன்மையையே விரும்புகிறேன். ஆயினும் நான் அல்லாஹ்வின் தூதராக இருந்தும் என்னுடைய நிலைமை (நாளை) என்னவாகும் என்பது எனக்குத் தெரியாது" என்று கூறினார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அதற்குப் பிறகு நான் யார் விஷயத்திலும் (அவ்வாறு) பாராட்டிக் கூறுவதேயில்லை." (புஹாரி: கஉசஈ)

- ❖ ஜனாசாவைக் குளிப்பாட்டுதல்.
  - ✓ குளிப்பாட்டுவது கடமை என்பதற்கு ஏராலமான சான்றுகள் இருக்கின்றன.
  - ✓ அதை குளிப்பாட்டும் போது மூன்று விடுத்தமோ, தேவைக்கேட்ப அதைவிட அதிகமாகவோ ஒற்றைப்படையாக குளிப்பாட்டுதல்,
  - ✓ சுத்தப்படுத்துவதற்காக இலந்தை இலையையோ, சவர்க்காரம் போன்ற, அழுக்கைப் போக்கும் ஏதாவது ஒன்றையோ பயன்படுத்தல்.
  - ✓ கடைசி விடுத்தம் ஊற்றும் நீருடன் கட்பூரத்தை கலந்துகொள்ளல்.
  - ✓ பெண்களின் கொண்டைகளை கலைந்து, நன்றாக கழுவிவிட்டு, மூன்று கொண்டைகளிட்டு, பின் பக்கமாக விட்டுவிடுதல்.

.

- ✓ குளிப்பாட்டும் போது வலது பக்கத்தைக் கொண்டு ஆரம்பித்து, அதிலும் வுழுவுடைய உறுப்புக்களைக் கொண்டு ஆரம்பித்தல்.
  - ➢ உம்மு அதீய்யா (றழி) கூறினார்கள்: நபி (ஸல்)அவர்களின் மகளை நாங்கள் குளிப்பாட்டிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த நபிகளார் 'அவரை இலந்தை இலை கலந்த நீரால் மூன்று அல்லது ஐந்து அல்லது தேவைக்கேற்ப அதைவிட அதிகமான தடவைகள்,ஒற்றைப் படையாக குளிப்பாட்டுங்கள், கடைசியில் கற்பூரத்தைச் சேர்த்துக்கொள்ளுங்கள், குளிப்பாட்டி முடிந்ததும் எனக்கு அறிவியுங்கள்.' என்று கூறினார்கள். குளிப்பாட்டி முடிந்ததும் நாங்கள் நபியவர்களுக்கு அறிவித்தோம், அப்போது அவர்கள் தமது கீழாடையைத் தந்து இதை அவரது உடலில் சுற்றுங்கள்' எனக் கூறினார்கள்.

    ஹப்ஸா (றழி) அவர்களது அறிவிப்பில், ஒற்றை படையாக குளிப்பட்டுங்கள், மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு தடவைகள் நீரை ஊற்றுங்கள், அவரது வலப்புரத் திலிருந்தும், வுழூச் செய்யவேண்டிய உருப்புக்களிலிருந்தும் ஆரம்பியுங்கள், என்று நபிகளார் கூறினார்கள். நாங்கள் அவர்களுக்கு தலை வாரி மூன்று கொண்டைகளை பின்னினோம்' என்றும் வந்துள்ளது. (புஹாரி 1254, முஸ்லிம்)
  - ➢ மற்றொரு அறிவிப்பில், நபியவர்களின் மகளின் சடலத்திற்க்கு தலையில் பெண்கள் மூன்று கொண்டைகளைப் பின்னியிருந்தார்கள், பிறகு அவற்றைப் பிரித்துக் கழுவிவிட்டுப் பிறகு மீண்டும் மூன்று கொண்டைகளைப் பின்னி, அதை முதுகுப் பின்னால் போட்டு வைத்தோம்'. என உம்மு அதீய்ய (றழி) கூறினார்கள். (புஹாரி: 1260, 1263)
- ✓ ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் குளிப்பாட்டுதல், கனவன் மனைவி ஒருவர் மற்றவரைக் குளிப்பாட்டலாம்.
  - ➢ ஆயிஷா (றழி) அவர்கள் கூறினார்கள்: 'நபியவர்கள் பகீஇல் ஒரு ஜனாசாவை அடக்கிவிட்டு வரும் போது, எனக்கு தலையில் வலி ஏற்பட்டிருந்தது, நான் தலை வலியே எனக்கூறி கொண்டிருந்தேன், அப்போது நபியவர்கள், தலை வலியே எனக்கூறிவிட்டு, 'உனக்கு எந்த பாதிப்பும் இல்லை, எனக்கு முன் நீ மரணித்தால் உன்னை நான் குளிப்பாட்டி, கபனிட்டு, பிறகு உனக்காக தொழுவித்து, உன்னை அடக்கமும் செய்வேன்.' என்று கூறினார்கள். (அஹ்மத்)
- ✓ குளிப்பாட்டும் போது தூய்மையான எண்ணத்துடன் குளிப்பாட்டி, அதில் ஏதும் குறைகளைக் கண்டு அதை மறைத்தால் பெரும் கூலியும் இருக்கின்றது.
  - ➢ நபி (ஸல்) கூறினார்கள் யார் ஒரு முஸ்லிமைக் குளிப்பாட்டி, அதிலிருக்கும் குறையை மறைக்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் நாற்பது விடுத்தம்

மன்னிப்பளிக்கின்றான், யார் அவருக்காக கப்ரு வெட்டி அதில் அடக்கமும் செய்கின்றாரோ அவருக்கு, மறுமை நாள்வரை ஒரு வீட்டில் வாழவைத்த கூலியை அல்லாஹ் கொடுக்கின்றான், மேலும் யார் கபனிடுகின்றாரோ, அவருக்கு மறுமை நாளில் பட்டு, மரத்திலிருந்து அல்லாஹ் சுவனத்தில் ஆடை அணிவிப்பான்.' (அல் ஹாகிம், பைஹகீ)

- ✓ குளிப்பாட்டியவர் தேவை என்றால் குளித்துக் கொள்ளலாம், அது கடமை இல்லை.
  - ➢ நபி (ஸல்) கூறினார்கள்: 'யார் ஒரு மையித்தைக் குளிப்பாட்டுகின்றாரோ அவர் குளித்துக்கொள்ளட்டும், அதை சுமந்து சென்றவர் வுழூ செய்துகொள்ளட்டும். (அபூ தாவுத், திர்மிதி)
  - ➢ நபி (ஸல்) கூறினார்கள்: நீங்கள் மையித்தை குளிப்பாட்டினால் அதற்காக உங்களுக்கு குளிப்பு கடமையில்லை, ஏனெனில் உங்கள் மையித் நஜிசல்ல, நீங்கள் கையை கழுவிகொண்டாலே போதுமானது.' (அல் ஹாகிம், பைஹகீ)
- ✓ யுத்தங்களில் ஷஹீதாக்கப்பட்டவர்களை குளிப்பாட்டத் தேவையில்லை.
  - ➢ ஜாபிர் (றழி) அவர்கள் கூறினார்கள்: நபியவர்கள் உஹது யுத்தத்தில் ஷஹீதானவர்களை இரண்டிரண்டு பேராக சேர்த்து, யார் அதிகம் குர்ஆனை சுமந்தவர் என்று' கேட்பார்களாம், இன்னார் என ஒருவர் காட்டப்பட்டால், அவரை குழியில் முற்படுத்துவார்கலாம், பிறகு 'மறுமை நாளில் இவர்களுக்கு நான் ஷாட்சியாக இருப்பேன்' என்று கூறினார்கள், அவர்களை குளிப்பாட்டாமல், இரத்தததுடனே அடக்குமாறு ஏவினார்கள். (புஹாரி: 1288)

❖ அதனை கபனிடுதல்

- ✓ கபனை பொருத்தவரை அதன் செலவை மரணித்தவர் செலவில் செய்வதே நன்று. மற்றவர்கள் உதவியோடும் செய்து கொள்ளலாம்
  - ➢ இப்ராஹீம் அறிவித்தார். நோன்பாளியாக இருந்த அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அவர்களிடம் (நோன்பை நிறைவு செய்வதற்காக) உணவு கொண்டு வரப்பட்டது. அப்போது அவர், 'என்னை விடச் சிறந்தவரான முஸ்அப் இப்னு உமைர்(ரலி) கொல்லப்பட்டபோது அவரின் உடல் ஒரு சால்வையால் கஃபனிடப்பட்டது. அப்போது அவரின் தலைமறைக்கப்பட்டால் அவரின் கால்கள் வெளியில் தெரிந்தன. கால்கள் மறைக்கப்பட்டால் தலை வெளியில் தெரிந்தது, மேலும், ஹம்ஸா(ரலி) அவர்களும் கொல்லப்பட்டபோது அவரும் என்னைவிடச் சிறந்தவர் தாம் (அவரின் நிலையும் அவ்வாறே இருந்தது) பிறகுதான் உலக வசதி வாய்ப்புக்கள் எங்களுக்கு விசாலமாக்கப்பட்டன. அல்லது உலகத்திலுள்ள அனைத்தும் எங்களுக்குக் கொடுக்கப்பட்டன. எனவே, எங்களின் நன்மைகளெல்லாம் (முற்கூட்டியே) உலகிலேயே கொடுக்கப்பட்டு விடுமோ என நான் அஞ்சுகிறேன்'

எனக் கூறிவிட்டு உணவைத் தவிர்த்துவிட்டு அழ ஆரம்பித்துவிட்டார்கள். (புஹாரி : 1275)

- கப்பாப்(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்களுடன் அல்லாஹ்வுக்காகவே ஹிஜ்ரத் செய்தோம். எங்களுக்கான கூலி அல்லாஹ்விடமுள்ளது. எங்களில் சிலர் தம் கூலியை (இவ்வுலகத்தில்) உண்ணாமல் இறந்துள்ளனர். அவர்களில் முஸ்அப் இப்னு உமைர்(ரலி) ஒருவர். எங்களில் வேறு சிலர் (இவ்வுலகில்) பூத்துக் குலுங்கிச் செழித்து அனுபவித்ததும் உண்டு. இப்னு உமைர்(ரலி) உஹதுப் போரில் கொல்லப்பட்டார். அவரின் உடலைக் கஃபன் செய்வதற்கு ஒரேயொரு சால்வை மட்டுமே இருந்தது. அதன் மூலம் அவரின் தலையை மறைத்தால் கால்கள் வெளியில் தெரிந்தன: கால்களை மறைத்தால் தலை வெளியில் தெரிந்தது. அப்போது அவரின் தலையைத் துனியால் மறைத்துவிட்டு அவரின் கால்களை இத்கிர் என்ற புல்லைப் போட்டு மறைக்குமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அவர்களின் காலத்தில் முன்கூட்டியே கஃபன் துணியைத் தயாராக வைத்தவரை நபி(ஸல்) அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. (புஹாரி : 1276)

✓ கபனிடும் போது முழு உடலையும் மறைக்கும் அளவுக்கு பரிபூரணமாக செய்தல்.

- நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் ஒரு நாள் பிரசங்கம் செய்தார்கள். (அப்போது) தனது தோழர்களில் ஒரு மனிதர் இறப்பெய்தி, பற்றாத கபன் அவருக்கு இடப்பட்டு இரவில் அடக்கமும் செய்விக்கப்பட்டு விட்டார் என்ற (விஷயத்தை) கூறிவிட்டு (இரவில் ஒரு மனிதர் இறப்பெய்திவிட்டால்) அவருக்கு தொழுகை நடத்தப்படும் வரை (இரவிலேயே) அடக்கப்படுவதைக் கண்டித்தார்கள். அவ்வாறு செய்ய (எந்த) மனிதராவது நிர்பந்திக்கப்பட்டாலே தவிர. ‘உங்களில் ஒருவர் தன் சகோதரருக்கு கபனிட்டால் அவரது கபனை (பற்றாக் குறையாக இடாது, நிறைவாக) அழகாக இடவும்’ எனவும் கூறினார்கள். (முஸ்லிம்: சகூகூ) அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரளி)

✓ ஒரு துனியினால் கபனிடுதல்.

- முஸ்அப் இப்னு உமைர்(ரலி) உஹதுப் போரில் கொல்லப்பட்டார். அவரின் உடலைக் கஃபன் செய்வதற்கு ஒரேயொரு சால்வை மட்டுமே இருந்தது. அதன் மூலம் அவரின் தலையை மறைத்தால் கால்கள் வெளியில் தெரிந்தன: கால்களை மறைத்தால் தலை வெளியில் தெரிந்தது. அப்போது அவரின் தலையைத் துணியால் மறைத்துவிட்டு அவரின் கால்களை இத்கிர் என்ற புல்லைப் போட்டு மறைக்குமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். (புஹாரி : 1276)

✓ இரு துனிகளால் கபனிடுதல்.

- ஹஜ்ஜின்போது அரபாவில் ஒட்டகத்தில் இருந்த ஒருவர் விழுந்து, அவரை அது மிரித்துவிட்டது, (அவர் மரணித்து விட்டார்) நபியவர்கள் கூரினார்கள்: 'அவரை நீராலும், இலந்தை இலையைக் கொண்டும் குளிப்பாட்டி, அவரது இரு ஆடைகளிலும் அவரை கபனிடுங்கள், அவருக்கு நறுமணம் பூசவோ, தலை முகத்தை மூடவோ வேண்டாம், ஏனெனில் அவர் தல்பியா கூறிய நிலையிலேயே எழுப்பப்படுவார்.' என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

✓ மூன்று துனிகளால் கபனிடுதல்.

- மிகத்தூய்மையான வெள்ளை நிறமுள்ள மூன்று துனிகளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கபனிப்பட்டார்கள். அதில் தலைப்பாகையோ சட்டையோ இல்லை. (ஆயினும்) கீழாடை மேலாடை இரண்டும் ஒரே துனியில் அமைந்த ஒன்றை அதில் அவர்களை கபனிப்படுவதற்காக வாங்கப்பட்டது, ஜனங்களுக்கு ஒரு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டது. அவர்களை கபனிடுவதற்காக வாங்கப்பட்ட கீழாடை மேலாடை இரண்டும் ஒரே துனியில் உள்ள (அதில்) நபி (ஸல்) அவர்களைக் கஃபனிடுவது கைவிடப்பட்டு மிகத்தூய்மையான வெள்ளை நிறமுள்ள மூன்று துனிகளில் அவர்களுக்கு கபனிடப்பட்டது. ஆகவே ஒரே துனியில் கீழாடை, மேலாடை உள்ள அதை அப்துல்லாஹ் பின் அபூபக்கர் (ரளி) அவர்கள் எடுத்துக் கொண்டு, என்னை அதில் கபனிடப்படும் வரை மிக உறுதியாக அதை நான் தேக்கிவைப்பேன் என்றார். அதன்பிறகு, அல்லாஹ் தனது நபிக்கு பொருத்தப் பட்டிருந்தால் அவர்களை அதில் கபனிடச்செய்திருப்பான் அவ்வாறில்லை என்கின் றபோது அதை எனக்கு கபனிடப்பட்டு கொள்ள நான் விரும்பவில்லை எனக்கூறி அதை விற்று அதன் கிரயத்தை தர்மம் செய்துவிட்டார்கள். அறிவிப்பவர் : ஆயிஷா (ரளி) (புஹாரி, முஸ்லிம்: சகூஅ)
- ஆயிஷா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்)அவர்கள் மூன்று வெண்ணிறப் பகுதி ஆடைகளால் கஃபனிடப்பட்டார்கள்: அவற்றில் சட்டையோ, தலைப்பாகையோ இருக்கவில்லை. (புஹாரி: கஉஎக, முஸ்லிம்)

✓ உடுத்த ஆடைகளாலும் கபனிடலாம்.

- இப்னு உமர்(ரலி) அறிவித்தார். (நயவஞ்சகர்களின்தலைவன்) அப்துல்லாஹ் இப்னு உபை இறந்துவிட்டான். அப்போது அவனுடைய (முஸ்லிமான) மகன், நபி(ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! உங்கள் சட்டையைத் தாருங்கள். அவரை அதில் கஃபன் செய்யவேண்டும்; மேலும் நீங்கள் அவருக்கு ஜனாஸாத் தொழுது. அவருக்காகப் பாவமன்னிப்பும் கேட்க வேண்டும்" என்று கூறினார். உடனே நபி(ஸல்) அவர்கள் தங்களின்

சட்டையை அவருக்குக் கொடுத்துவிட்டு, '(ஆயத்தமானதும்) எனக்குத் தெரிவியுங்கள்; நான் ஜனாஸாத் தொழுகை நடத்துவேன்" என்றார்கள். பிறகு அறிவிக்கப்பட்டதும், நபி(ஸல்) அவர்கள் அவனுக்கு ஜனாஸாத் தொழ நாடியபோது, உமர்(ரலி) நபி(ஸல்) அவர்களை இழுத்து, 'நயவஞ்சகர்களுக்கு ஜனாஸாத் தொழக்கூடாது என அல்லாஹ் உங்களைத் தடுக்கவில்லையா?' எனக் கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள் '(ஜனாஸாத் தொழுவது, தொழமலிருப்பது என) இரண்டில் எதையும் தேர்ந்ததெடுத்துக் கொள்ளும் உரிமை எனக்கு உள்ளது' எனக் கூறிவிட்டு, 'நீர் நயவஞ்சகர்களுக்குப் பாவமன்னிப்புத் தேடினாலும் அல்லது தேடாமலிருந்தாலும் சமமே! நீர் அவர்களுக்காக எழுபது முறை பாவமன்னிப்புத் தேடினாலும் அல்லாஹ் அவர்களை மன்னிக்கப் போவதே இல்லை" என்ற (திருக்குர்ஆன் 09:80) வசனத்தை ஓதிக்காட்டிவிட்டு ஜனாஸாத் தொழுதார்கள். உடனே 'அ(ந்நய)வ(ஞ்சக)ர்களில் யாரேனும் இறந்தால் அவர்களுக்காக ஒருபோதும் (ஜனாஸாத்) தொழ வேண்டாம்" என்ற (திருக்குர்ஆன் 09:84) வசனம் அருளப்பட்டது.

(புஹாரி: கஉகூகூ)

- ஜாபிர்(ரலி) அறிவித்தார். இப்னு உபை கப்ரில் வைக்கப்பட்ட பின் அங்கு வந்த நபி(ஸல்) அவனுடைய உடலை வெளியிலெடுக்க செய்து அவன் உடலில் தம் எச்சிலை உமிழ்ந்துவிட்டுத் தம் சட்டையை அவனுக்கு அணிவித்தார்கள். (புஹாரி: கஉஎ0)

✓ தனக்கான கபனை உயிர் வாழும் போதே தயார் செய்து வைக்கவும் முடியும்.

- கப்பாப்(ரலி)அறிவித்தார்.........அவர்களின் காலத்தில் முன்கூட்டியே க.்பன் துணி யைத் தயாராக வைத்தவரை நபி(ஸல்) அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. (புஹாரி : 1276)
- அபூ பக்ர் (றழி) அவர்கள் நபியவர்களுக்காக கபனிட வந்த ஆடையை எடுத்து வைக்க ஆசைபட்டதைப் போன்று. ((முஸ்லிம்: சகூஅ)
- அபூ ஹாஸிம் அறிவித்தார். ஒரு பெண்மணி நபி(ஸல்) அவர்களிடம் புர்தா -- குஞ்சங்கட்டப்பட்ட ஒரு சால்வையைக் கொண்டு வந்தார் என்று ஸஹ்ல்(ரலி) கூறிவிட்டு --"புர்தா என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டபோது (அங்கிருந்தோர்) 'ஆம்! புர்தா என்பது சால்வைதானே! என்றனர். ஸஹ்ல் 'ஆம்' எனக் கூறிவிட்டு மேலும், அப்பெண்மணி 'நான் என்னுடைய கையாலேயே இதை நெய்திருக்கிறேன். இதனை உங்களுக்கு அணிவிக்கவே நான் கொண்டு வந்தேன்" என்றதும் அது தேவையாயிருந்ததால் நபி(ஸல்) அவர்கள்

அதைப் பெற்றார்கள். பிறகு அவர்கள் அதைக் கீழாடையாக அணிந்து எங்களிடம் வந்தபோது ஒருவர் 'இது எவ்வளவு அழகாக இருக்கிறது! எனக்கு இதை நீங்கள் அணிவித்து விடுங்கள்" என்று கேட்டார். உடனே அங்கிருந்தோர் 'நீர் செய்வது முறையன்று; நபி(ஸல்) அவர்களுக்கு அது தேவைப்பட்டதால் அதை அணிந்திருக்கிறார்கள். நபி(ஸல்) அவர்கள் கேட்பவர்களுக்குக் கொடுக்காமலிருக்க மாட்டார்கள் என்று தெரிந்து கொண்டே நீர் அதை அவர்களிடம் கேட்டு விட்டீரே' எனக் கூறினார்கள். அதற்கவர் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அதை (சாதாரணமாக) அணிந்து கொள்வதற்ககாகக் கேட்கவில்லை: அது எனக்கு கஃபனாக ஆகி விடவேண்டும் என்றே கேட்டேன்" என்றார். 'பின்பு அது அவருக்குக் கஃபனாகவே ஆகிவிட்டது" என்று ஸஹ்ல் கூறினார். . (புஹாரி : 1277)

- கபனிடும் போது கவணிக்கவேண்டிய இன்னும் சில விடயங்கள்.

✓ வெண்மை நிறத்தை முதன்மை படுத்தல்,

- நபியவர்கள் வென்நிற ஆடையினால் கபனிடப்பட்டார்கள்.
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களது ஆடைகளில் வெள்ளை நிறமானதை அணிந்துக்கொள்ளுங்கள், ஏனெனில் அதுவே ஆடைகளில் சிறந்ததாகும், மேலும் அதன் மூலமே கபனிடுங்கள்.' (அபூ தாவுத், திர்மிதி)

✓ நறுமணங்களைப் பூசிவிடுதல்.

- ஹஜ்ஜின்போது அரபாவில் ஒட்டகத்தில் இருந்த ஒருவர் விழுந்து, அவரை அது மிரித்துவிட்டது, (அவர் மரணித்து விட்டார்) நபியவர்கள் கூரினார்கள்: 'அவரை நீராலும், இலந்தை இலையைக் கொண்டும் குளிப்பாட்டி, அவரது இரு ஆடைகளிலும் அவரை கபனிடுங்கள், அவருக்கு நறுமணம் பூசவோ, தலை முகத்தை மூடவோ வேண்டாம், ஏனெனில் அவர் தல்பியா கூறிய நிலையிலேயே எழுப்பப்படுவார்.' என்று கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)

✓ மூன்று துனிகளைவிட அதிகப்படுத்தாதிருத்தல், ஏனெனில் நபியவர்கள் அதிகப்படுத்தவில்லை.

- ஐந்து துனியால் கபனிடுவதும், அதில் தலைப்பாகை வெட்டுவது, மேலாடை கீழாடை என வேறுவேறாக வெட்டி எடுப்பதும், அதை தைத்துத்தான் அணிவிக்கவேண்டும் என்பதற்கெல்லாம் ஸஹீஹான ஹதீஸ்கள் வரவில்லை, எனவே நபிவழியைப் பின்பற்றியே எமது கபனையும் ஆக்கிக்கொள்ளவேண்டும்.
- கபன் விடயத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கு உள்ள சட்டமேதான், ஏனெனில் வித்தியாசப்படுத்த ஸஹீஹான ஹதீஸ்கள் வரவில்லை. பெண்கள் விடயத்தில் அபூதாவுதில் வரும் ஒரு ஹதீஸ் பலவீனமானதே.

❖ ஜனாசாவை சுமப்பதும், அதை பின்தொடர்ந்து செல்வதும்.

- ✓ இது ஒரு முஸ்லிம் தன் சகோதரனுக்கு செய்யவேண்டிய கடமைகளுல் ஒன்றாகும்.
  - ➢ இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து. அவை ஸலாமுக்கு பதிலுரைப்பது, நோயாளியை விசாரிப்பது, ஜனாஸாவப் பின்தொடர்வது, விருந்தழைப்பை ஏற்றுக் கொள்வது. தும்முபவருக்கு மறுமொழி கூறுவது ஆகியவையாகும். . (புஹாரி : 1240) அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.
- ✓ துயர்ந்து செல்வது என்பது இரண்டு விதத்தில் அமையும், வீட்டிலிருந்து தொழுவிக்கும் வரை மட்டும் பின்தொடர்வது, அல்லது தொழுகையிலும் கலந்துகொண்டு, அடக்கும் வரை இருப்பது, இரண்டாவது கட்டமே சிறப்புக்குறியது.
  - ➢ நாபிஃ அறிவித்தார்: ஜனாசாவைப் பின்தொடர்கிறவருக்கு ஒரு கீராத் நன்மையுண்டு என அபூ ஹுரைரா(ரலி) கூறினார் என இப்னு உமர்(ரலி) அவர்களிடம் கூறப்பட்டதும் 'அபூ ஹுரைரா(ரலி) மிகைப்படுத்துகிறார்' என்றார். ஆயிஷா(ரலி) அபூ ஹுரைரா(ரலி)வின் கூற்றை உண்மைப்படுத்தியதுடன், 'நானும் நபி(ஸல்) அவர்கள் அவ்வாறு கூறக் கேட்டிருக்கிறேன்' என்றும் கூறினார். இதைக்கேட்ட இப்னு உமர்(ரலி) 'அப்படியாயின் நாம் அதிகமான கீராத்களைப் பாழ்படுத்தி விட்டோமே' என்றார். . (புஹாரி : 1323,1324)
  - ➢ அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். ஜனாஸாத் தொழுகையில் பங்கேற்கிறவருக்கு ஒரு கீராத் நன்மையுண்டு: அடக்கம் செய்யப்படும் வரை கலந்து கொள்கிறவருக்கு இரண்டு கீராத்கள் நன்மை உண்டு' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது 'இரண்டு கீராத்கள் என்றால் என்ன?' என வினவப்பட்டது. அதற்கவர்கள், 'இரண்டு பெரிய மலைகளைப் போன்ற அளவு (நன்மை)" என்றார்கள். . (புஹாரி : 1325)
- ✓ ஜனாசாவை பின்தொடரும்போது நபி வழிக்கு முரனான, நபிகளார் காட்டித்தராத காரியங்களை செய்யக்கூடாது, சத்தம்போட்டு திக்ர்செய்வது, நறுமனங்கள் தெளித் தவாரோ, பகல் நேரத்தில் விளக்குகளை ஏந்தியவாரோ செல்லக்கூடாது.
- ✓ சுமந்து செல்லும் போது விரைவக நடப்பதும் முக்கியமனது.
  - ➢ இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஜனாஸாவை (சுமந்து செல்லும் போது) விரைந்து செல்லுங்கள். அது (மய்யித்) நல்லறங்கள் புரிந்ததாயிருந்தால் அந்த நன்மையின் பால் விரைந்து செல்கிறீர்கள்; அவ்வாறில்லாவிட்டால் ஒரு தீங்கை (விரைவில்) உங்களின் தோள்களிலிருந்து இறக்கி வைக்கிறீர்கள்." . (புஹாரி : 1315, முஸ்லிம்: சஎ0) .
  - ➢ இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்." ஜனாஸா (பெட்டியில்) வைக்கப்பட்டு அதை ஆண்கள் தங்கள் தோள்களில் தூக்கிச் செல்லும்போது, அந்த ஜனாஸா

நல்லறங்கள் புரிந்தாக இருக்குமானால், என்னை விரைந்து செல்லுங்கள் என்று கூறும். அது நல்லறங்கள் புரியாததாக இருக்குமானால், கைசேதமே! என்னை எங்கே கொண்டு செல்கிறீர்கள் என்று கூறும். இவ்வாறு கூறும் சப்தத்தை மனிதனைத் தவிர அனைத்தும் செவியுறும் மனிதன் அதைச் செவியுற்றால் மயங்கி விழுந்து விடுவான்." அபூ ஸயீதுல் குத்ரி(ரலி) அறிவித்தார். . (புஹாரி : 1314)

- ✓ ஜனாசாவை பிதொடரும் போது முன்னாலோ பின்னாலோ செல்லலாம்.
- ➢ அனஸ் (றழி) அவர்கள் கூறினார்கள்: நபியவர்களும், அபூ பக்ர் உமர் (றழி) ஆகியோரும் ஜனாசாவுக்கு முன்னாலும், பின்னாலும் நடப்பவர்களாக இருந்தார்கள்.' (தஹாவி)
- ✓ ஜனாசாவை பின்தொடரும்போது தேவை ஏற்படின் வாகனங்களில் ஏறிச் செல்லலாம், திரும்பிவரும்போது தாராலமாகவே வாகனங்களில் ஏறிச் செல்லலாம்.
- ➢ இப்னு தஹ்தாஹ் (ரளி) அவர்களுக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (ஜனாஸா) தொழுகை நடத்தினர். (அது முடிந்தபின்) எதுவும் விரிக்கப்படாத நிலையில் ஒரு குதிரை அவர்களுக்காக கொண்டுவரப்பட்டது. ஒரு மனிதர் அக்குதிரையை பிடித்திருக்க அதன்மீது நபி (ஸல்) அவர்கள் ஏறினார்கள். அவர்களை (ஏற்றிக்கொண்டு) அக்குதிரை தன் பாதங்களை நெருக்கமாக வைத்து நடந்தது. நாங்கள் அவர்களுக்குப் பின்னால் தொடர்ந்து விரைந்தோம். கூட்டத்திலிருந்த ஒரு மனிதர், “இப்னு தஹ்தாஹ்விற்காக சுவனத்தில் எத்தனையோ ஈச்சங்குலைகள் தொங்கவிடப்பட்டுள்ளன என்றும், அல்லது அதை அவர் உண்ணுவதற்கு தகுந்தார்போல் நெருக்கமாக வைக்கப்பட்டுள்ளது என்றும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக” கூறினார். ((முஸ்லிம்: ச அரு)
- ✓ ஜனாசாக்களை வாகனங்களில் ஏற்றிச் செல்வதை பொறுத்தவரை அதில் நபி வழியில் சான்றுகள் இல்லை, ஆனாலும் நபியவர்கள் தோழில் சுமந்து செல்வது என்ற வார்த்தையோடு சேர்த்து கூறியிருக்கின்றார்கள். மேலும் அதுவே மரண சிந்தனையை அதிகப்படுத்தவும் காரணமாக இருக்கும்.
- ➢ இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்." ஜனாஸா (பெட்டியில்) வைக்கப்பட்டு அதை ஆண்கள் தங்கள் தோள்களில் தூக்கிச் செல்லும்போது,........ . (புஹாரி : 1314)
- ✓ ஜனாசாக்கள் சுமந்து செல்வதைக் காணுபவர் எழுந்து நிற்பதை பொறுத்தவரை, அது ஆரம்பத்தில் சட்டமாக இருந்து, பிறகு அமர்ந்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
- ➢ ஒரு ஜனாஸா சென்றது (ஒரு ஜனாஸாவை மக்கள் எடுத்துச் சென்றனர்.) அதன் பொருட்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (எழுந்து) நின்றனர், (அதைப்பார்த்து) நாங்களும் எழுந்து நின்றோம். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அது யூதப்பெண்ணின் ஜனாஸாவாகும் எனக்கூறினோம். (அதற்கவர்கள்) மரணம்

என்பது நிச்சயமாக திடுக்க(ம் தரும் செய்தியாகும்)மாகும். ஆகவே ஜனாஸாவை (எடுத்துச் செல்லக்) கண்டால் அதன் நிமித்தம் எழுந்து நில்லுங்கள் எனக் கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்: சஎஉ) அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரளி)

- அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை (ஜனாஸாவிற்காக) எழுந்திருக்கக்கண்டு நாங்களும் எழுந்தோம். (ஆனால் பின்பு) ஜனாஸாவிற்காக அவர்களும் அமர்ந்தார்கள், நாங்களும் அமர்ந்தோம் என அலி (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புஹாரி, முஸ்லிம்: சஎஈ)

- ✓ பெண்கள் ஜனாசாகளை பின்தொடர்வது அனுமதிக்கப்பட்டதல்ல.

- உம்மு அதிய்யா(ரலி) அறிவித்தார். ஜனாஸாவை பின்தொடந்து செல்ல (பெண்களாகிய) நாங்கள் (நபி(ஸல்) அவர்களால்) தடுக்கப்பட்டிருந்தோம்: ஆனால் வன்மையாக நாங்கள் தடுக்கப்படவில்லை (புஹாரி: கஉஎஅ, முஸ்லிம்: சஎக)

❖ ஜனாசாவுக்காக தொழுகை நடாத்துதல்

- ✓ ஒரு முஸ்லிமின் ஜனாசாவுக்கு செய்யவேண்டிய கடமைகளுல் தொழுவிப்பதும் ஒன்றாகும். ஆனால் இரு சாராருக்கு கடமை இல்லை, காரணம் நபியவர்கள் அவர்களுக்காக தொழுவித்தும், தொழுவிக்காமலுல் இருந்திருக்கின்றார்கள்.

1. வயதுக்கு வராத குழந்தைகள்

- ஆயிஷா (றழி) கூறினார்கள்: நபியவர்களின் மகன் இப்ராஹீம் 18 மாத குழந் தையாக இருக்கும்போது மரணித்தார், அவருக்காக நபிகளார் தொழுவிக்கவில்லை. (அஹ்மத், அபூதாவுத்)

2. யுத்த களங்களில் ஷஹீதானவர்கள்.

- நபியவர்கள் உஹதில் சஹீதானவர்களுக்காக தொழுவிக்கவில்லை, ஆனாலும் ஹம்ஸா (றழி) அவர்களுக்காக தொழுவித்தார்கள்.

- ✓ குழந்தைகளுக்கு தொழுவித்தல்

- ஆயிஷா (றழி) கூறனார்கள்: நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளைச் சேர்ந்த ஒரு சிறுவனின் ஜனாசாவுக்கு அழைக்கப்பட்டார்கள், அப்போது நான் : அல்லாஹ்வின் தூதரே! சுவனத்து சிட்டுக் குருவிகளுள் ஒரு குருவியான இதற்கு நற்செய்தி உண்டாகட்டும், அது எந்தத் தீமையும் செய்யவுமில்லை, அதை அது அடையவுமில்லை.' என்று கூறியபோது, 'வேறு எதுவும் இல்லையா ஆயிஷாவே?.' என்று கூறிவிட்டு, 'நிச்சியமாக அல்லாஹ் சுவனத்துக்குறியவர்களை அவர்கள் தன் தந்தையின் முதுகந்தண்டில் இருக்கும் போதே படைத்துவிட்டான், மேலும் நரகத்துக்குறியவர்களையும் அவர்கள் தன் தந்தையின் முதுகந்தண்டில் இருக்கும் போதே படைத்துவிட்டான்.' என்று கூறினார்கள். (முஸ்லிம்)

- நஸாஇயின் அறிவிப்பில் 'நபியவர்கள் அதற்காக தொழுவித்தார்கள்.' என்று வந்துள்ளது.

✓ ஷஹீதுக்கு தொழுவித்தல்

- உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவித்தார். ஒரு நாள் நபி(ஸல்) அவர்கள் உஹதுக்குச் சென்று, (போரில் கொல்லப்பட்டவர்களுக்காக ஜனாஸாவை முன்னால் வைத்துத் தொழுவது போன்று) தொழுகை நடத்தினார்கள். பிறகு மிம்பருக்கு வந்து, 'நிச்சயமாக நான் உங்களுக்காகக் காத்திருப்பேன். உங்களுக்கு நான் சாட்சியும் கூறுவேன். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இப்போது (கவ்ஸர் எனும்) என்னுடைய தடாகத்தைக் காண்கிறேன். எனக்கு பூமியின் கருவூலங்களின் திறவுகோல்கள் அல்லது பூமியின் திறவுகோல்கள்... கொடுக்கப்பட்டுள்ளன. நிச்சயமாக அல்லாஹ்வின் மீது ஆணையாக! என(து மரணத்து)க்குப் பின்னால் நீங்கள் இணைவைப்பார்களாக ஆகிவிடுவீர்களோ என்று நான் பயப்படவில்லை. ஆனால், (உலகத்திற்காக) நீங்கள் ஒருவரோடொருவர் மோதிக் கொள்வீர்களோ என்றே பயப்படுகிறேன்!" என்று கூறினார்கள். (புஹாரி: கஙசச)

✓ கடன் உள்ள நிலையில் மரணித்தவருக்கு தொழுவித்தல்.

- ஸலமா இப்னு அக்வஃ(ரலி) அறிவித்தார். தொழுகை நடத்துவதற்காக ஒரு ஜனாஸா கொண்டுவரப்பட்டது. 'இவர் கடனாளியா?' என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டபோது. நபித்தோழர்கள் 'இல்லை!" என்றனர். அவருக்கு நபி(ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். பிறகு மற்றொரு ஜனாஸா கொண்டு வரப்பட்டபோது 'இவர் கடனாளியா?' என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். நபித்தோழர்கள் 'ஆம்!" என்றனர். நபி(ஸல்) அவர்கள் 'அப்படியென்றால் உங்கள் தோழருக்கு நீங்களே தொழுகை நடத்துங்கள்!" என்றார்கள். அப்போது அபூ கதாதா(ரலி) 'இறைத்தூதர் அவர்களே! இவரின் கடனுக்கு நான் பொறுப்பு!" என்று கூறியதும் அவருக்கு நபி(ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள். (புஹாரி: உஉகூ௫)

✓ தொழுகை நடத்தப்படாமல் அடக்கம் செய்யப்பட்டவருக்காக அல்லது சிலர் தொழுவித்த பின் தொழுகையில் கழந்து கொள்ளாதவர்கள் அந்த ஜனாசாவுக்காக அதன் கபுரடியில் தொழுதல்.

- இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார். இரவில் அடக்கம் செய்யப்பட்டவரின் கப்ரைக் கடந்து சென்ற நபி(ஸல்) அவர்கள், 'இது அடக்கம் செய்யப்பட்டது எப்போது?' எனக் கேட்டார்கள். தோழர்கள் 'நேற்றிரவு தான்' என்றதும். 'எனக்கும் சொல்லியனுப் பியிருக்கக் கூடாதா' எனக் கேட்டார்கள். அதற்கு அம்மக்கள், 'அதை நாங்கள் இருள் சூழ்ந்த இரவில் அடக்கினோம். எனவேதான், உங்களை விழிக்கச் செய்ய விரும்பவில்லை' என்றார்கள். நபி(ஸல்) அவர்கள் தொழத் தயாராக எழுந்து

நின்றார்கள். நான் உட்பட அனைவரும் அவர்களுக்குப் பின்னால் அணிவகுத்ததும் அவர்கள் ஜனாஸாத் தொழுதார்கள். . (புஹாரி : 1321)

- பள்ளியை கூட்டிப்பெருக்கிக் கொண்டிருந்த ஒரு கருப்புப்பெண்ணை அல்லது ஒரு வாலிபரை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காணாததால் அவளை அல்லது அவரைப்பற்றி கேட்டனர். அதற்கு (அங்கிருந்தவர்கள்) அவள் அல்லது அவ்வாலிபர் இறப்பெய்திவிட்டதாக கூறினார்கள். அதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் (இதைப் பற்றி) எனக்கு நீங்கள் தெரிவித்திருக்க வேண்டாமா? எனக்கூறிவிட்டு அவளின் அல்லது அவ்வாலிபரது கப்ரை எனக்கு காட்டுங்கள் என்றனர். (அங்கிருந்தவர்கள் அப்பெண்ணுடைய அல்லது அவ்வாலிபருடைய மய்யித்து விஷயத்தை பெரிதாகக் கருதாமையால் நபி (ஸல்) அவர்களிடம் கூறாமல் இருந்துவிட்டனர் என்பதாக அறிவிப்பவர் கூறுகிறார்) (நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கிணங்க) அவளது அல்லது அவ்வாலிபரது கப்ரை காண்பித்தனர். அதன்மீது (அக் கப்ருக்கு அருகில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்கள் தொழுது விட்டு. நிச்சயமாக இந்தக்கப்ருகள் அதை உடையவர்களுக்கு இருளால் நிரப்பட்டுள்ளது எனது தொழுகையினால் அவர்களது கப்ரில் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு பிரகாசத்தை நல்குகிறான் எனக்கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரளி) (முஸ்லிம்: சஎகூ)
  - குறிப்பு : மய்யித்து தொழுகை உரியவருக்கு அத்தொழுகை தவறிவிடுமானால் அம்மய்யித்தின் கப்ருக்கு சென்று மய்யித்துத் தொழுகை நடத்துவது ஆகும் என்பதற்கு இந்த ஹதீஸ் ஆதாரமாகும். ஆனால் மற்ற தொழுகைகளை கப்ருகளின்பால் தொழுவது தடுக்கப்பட்டதாகும் என்பதை மற்றொரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள் என்பதை கவனத்தில் கொள்க.

✓ முஸ்லிம்கள் இல்லாத ஊரில் ஒருவர் மரணித்து, அவருக்கு தொழுகை நடத்தப்படவில்லையெனில் அவருக்காகாக வேறு ஊரில் உள்ள முஸ்லிம்கள் மறைவான ஜனாசா தொழுவித்தல்.

- அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் நஜாஷி(மன்னர்) இறந்த அன்று அவரின் மரணச் செய்தியை மக்களுக்கு அறிவித்தார்கள். பிறகு தொழுமி டத்திற்கு வந்து மக்களை வரிசைப்படுத்தி நிற்கவைத்து, நான்கு தக்பீர்கள் கூறி (ஜனாஸாத் தொழுகை நடத்தி)னார்கள். . (புஹாரி : 1245)
- ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார். இன்றையதினம் அபிஸினியாவைச் சேர்ந்த ஒரு நல்ல மனிதர் மரணித்துவிட்டார். எனவே வாருங்கள்; அவருக்காக ஜனாஸாத் தொழுங்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். நாங்கள்

அணிவகுத்து நின்றதும் நபி(ஸல்) அவர்கள் (ஜனாஸாத்) தொழுகை நடத்தினார்கள். அப்போது நான் இரண்டாவது அணியில் நின்றிருந்தேன். . (புஹாரி : 1320)

- ✓ குப்ர் இறை நிராகரிப்பில் அல்லது இணை வைத்த நிலையில் மரணித்தவருக்காக தொழுவதோ, பாவ மன்னிப்பு தேடுவதோ கூடாது.
- ➢ அவர்களில் யாராவது ஒருவர் இறந்து விட்டால் அவருக்காக நீர் ஒருபோதும் (ஜனாஸா) தொழுகை தொழவேண்டாம்; இன்னும் அவர் கப்ரில் (பிரார்த்தனைக்காக) நிற்கவேண்டாம்; ஏனென்றால் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும், அவன் தூதரையும் நிராகரித்து பாவிகளாகவே இறந்தார்கள். (அல் குர்ஆன் 9:84)

- ➢ முஷ்ரிக்குகள் (இணைவைப்பவர்கள்) தம் நெருங்கிய உறவினர்களாக இருப்பினும், நிச்சயமாக அவர்கள் நரகவாதிகள் என்று தெளிவாக்கப்பட்ட பின் அவர்களுக்காக மன்னிப்புக்கோருவது நபிக்கும், ஈமான் கொண்டவர்களுக்கும் தகுதியானதல்ல. இப்றாஹீம் (நபி) தம் தந்தைக்காக மன்னிப்புக் கோரிய தெல்லாம், அவர் தம் தந்தைக்குச் செய்திருந்த ஒரு வாக்குறுதிக்காகவேயன்றி வேறில்லை; மெய்யாகவே, அவர் (தந்தை) அல்லாஹ்வுக்கு விரோதி என்பது தெளிவாகியதும் அதிலிருந்து அவர் விலகிக்கொண்டார் நிச்சயமாக இப்ரா ஹீம் பொறுமையுடையவராகவும் இரக்கமுள்ளவராகவும் இருந்தார். (அல் குர்ஆன்: 9:113,114)
- ✓ ஜனாசா தொழுகை ஜமாஅத்தாகவே நிறைவேற்றப்படவேண்டும். ஏனெனில் நபிகளார் ஜமாஅத்தாகவே தொழுதுள்ளார்கள்.
- ➢ ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார். இன்றையதினம் அபிஸினியாவைச் சேர்ந்த ஒரு நல்ல மனிதர் மரணித்துவிட்டார். எனவே வாருங்கள்; அவருக்காக ஜனாஸாத் தொழுங்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். நாங்கள் அணிவகுத்து நின்றதும் நபி(ஸல்) அவர்கள் (ஜனாஸாத்) தொழுகை நடத்தினார்கள். அப்போது நான் இரண்டாவது அணியில் நின்றிருந்தேன். (புஹாரி : 1320)
- ➢ ஷைபானி அறிவித்தார். தனித்திருந்த கப்ரைக் கடந்து சென்ற நபி(ஸல்) அவர்கள் அதில் எங்களுக்கு இமாமாக நின்று (ஜனாஸாத்) தொழுகை நடத்தினார்கள். நாங்களும் அவர்களுக்குப் பின்னால் அணிவகுத்துத் தொழுதோம் என்று நபி(ஸல்) அவர்களுடன் சென்ற ஒருவர் எனக்கு அறிவித்தார்" என ஷஅபீ கூறினார். நாங்கள் 'அம்ரின் தந்தை(யாகிய ஷஅபீ )யே! உங்களுக்கு அதை அறிவித்தவர் யார்?' எனக் கேட்டதும் 'இப்னு அப்பாஸ்(ரலி) தாம்" என்றார் அவர். (புஹாரி : 1322)
- ✓ ஜமாஅத்தில் மூ∴மின்கள் அதிகமாக கலந்துகொள்வது மிகவும் சிறப்புக்குறியதே.

- ➢ எந்த மய்யித்தாக இருப்பினும் முஸ்லீம்களில் நூறை எத்திவிடுகிற ஒரு கூட்டம் அவருக்காக தொழுது பரிந்துரை செய்வார்கள் என்றால், அவர் விஷயத்தில் அவர்களது பரிந்துரை, (அல்லாஹ்வினால்) அங்கீகரிக்கப்பட்டதே என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம்: 482)
- ➢ இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறினார்கள்: முஸ்லிமான ஒரு மனிதர் இறப்பெய்தி அவர் ஜனாஸாவை அல்லாஹ்விற்கு எதையும் இணை வைக்காத நாற்பது பேர் தொழுதால், அவர்களின் (துஆவை) பரிந்துரையை அவர் விஷயத்தில் அல்லாஹ் அங்கீகரிக்கின்றான். என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்: 483)
- ✓ ஜனாசா தொழுகையை பள்ளியிலோ, திடலிலோ தொழுவிக்கலாம்.
- ➢ அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் மக்களை முஸல்லா எனும் திடலில் அணிவகுக்கச் செய்து (நஜாஷி மன்னருக்காக) நான்கு தக்பீர்கள் கூறி (ஜனாஸாத் தொழுகை நடத்தி)னார்கள். (புஹாரி : 1328)
- ➢ இப்னு உமர்(ரலி) அறிவித்தார். தம் சமூகத்தில் விபச்சாரம் செய்த ஆண் பெண் இருவரை யூதர்கள் நபி(ஸல்) அவர்களிடம் அழைத்து வந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டபடி அவ்விருவரும் பள்ளிவாசலில் ஜனாசாத் தொழுகை தொழுமிடத்திற்கருகில் கொண்டு செல்லப்பட்டுக் கல்லெறிந்து கொல்லப்பட்டார்கள். . (புஹாரி : 1329)
- ✓ ஆண்களுக்கு தலைக்கு நேராகவும், பெண்களின் இடுப்புக்கு நேராகவும் நிற்கவேண்டும்.
- ➢ அனஸ் (றழி) அவர்கள் ஒரு ஆண் ஜனாசாவுக்கு தொழுவிக்கும் போது தலைக்கு நேராகவும், பெண் ஜனாசாவுக்கு தொழுவிக்கும் போது இடுப்புக்கு நேராகவும் நின்றார்கள், காரணம் கேட்கப்பட்டபோது, நபிகளார் செய்ததாக கூறினார்கள். (அபூ தாவுத், திர்மிதி)
- ➢ ஸமுரா இப்னு ஜுன்துப்(ரலி) அறிவித்தார். பிரசவத் தொடக்குடனேயே இறந்துவிட்ட பெண்ணிற்கு நபி(ஸல்) அவர்கள் ஜனாஸாத் தொழுதபோது மையித்தின் நடுப்பகுதிக்கு நேராக நின்றார்கள். அப்போது நான் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் தொழுதேன். (புஹாரி : 1331)
- ✓ பெண்களும் ஜனாசா தொழுகையில் கலந்து கொள்ளலாம்.
- ➢ ஸஃது பின் அபீவக்காஸ் (ரளி) அவர்கள் இறப்பெய்திய பொழுது, நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கள் அவருக்கு அவர்கள் தொழுகை நடத்த வேண்டுமென்பதற்காக அவரது ஜனாஸாவை பள்ளிக்குக் கொண்டு வருமாறு (ஒருவரிடம் சொல்லி) அனுப்பினார். (அவர்கள் கூறியதற்கிணங்க அவ்வாறே)

அவர்களும் செய்தனர். நபி (ஸல்) அவர்களின் (மனைவிமார்கள் (ரளி) இருந்த) அறைகளுக்கு அருகாமையில் அவரது (ஜனாஸா கொண்டு வந்து) வைக்கப்பட்டது. அவர்கள் எல்லோரும் அவரது ஜனாஸாவிற்கு தொழுகை நடத்தினர். பள்ளியில் உட்காரும் இடங்கள் (உள்ள) பகுதியிலிருக்கும் ஜனாஸாக்களைக் கொண்டு செல்லும் வாயில் வழியாக வெளியே அவரைக் கொண்டு வரப்பட்டது. (அதற்குப்பிறகு) அவர்களது இச்செயலை (சில) மனிதர்கள் குறைகூறியதாக அவர்களுக்கு செய்தி எட்டியது. (அதாவது) ஜனாஸாக்களை பள்ளியினுள் நுழைவிக்கப்பட (கொண்டுவர) வேண்டியதில்லை என அவர்கள் கூறிய கூற்று ஆயிஷா (ரளி) அவர்களுக்கும் எட்டியது. மனிதர்களுக்கு எது பற்றி தெரியவில்லையோ அது விஷயத்தில் குறை கூற அவர்களை அவசரப்படுத்தியது எது? ஜனாஸாவை பள்ளியினுள் கொண்டு வந்ததைப் பற்றி அவர்கள் நம்மீது குறை கூறிவிட்டனர். (ஆனால் ஸுஹைல் பின் பைளாஉ (ரளி) என்பவருக்கு பள்ளியினுள் வைத்தே தவிர அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (வேறெங்கும்) தொழவை க்கவில்லை (என்ற விஷயம் ஏன் அவர்களுக்கு தெரியாமல் போய்விட்டது) எனக்கூறினார்கள். அறிவிப்பவர் : ஆயிஷா (ரளி) (முஸ்லிம்: 478)

- ✓ ஜனாசா தொழுகையில் நான்கு தக்பீர்கள் சொல்லுதல் , இதுவே நபிகளாரின் செயல்களில் அதிகம் நடந்துள்ளது..
- ➢ அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார். நபி(ஸல்) அவர்கள் மக்களை முஸல்லா எனும் திடலில் அணிவகுக்கச் செய்து (நஜாஷி மன்னருக்காக) நான்கு தக்பீர்கள் கூறி (ஜனாஸாத் தொழுகை நடத்தி)னார்கள். (புஹாரி : 1328)
- ✓ ஜனாசா தொழுகையில் ஐந்து தக்பீர்கள் சொல்லுதல்.
- ➢ ஜைது (என்பவர்) எங்களது ஜனாஸாக்களுக்கு நான்கு தக்பீர் கூறக்கூடியவராக இருந்தார். ஒரு ஜனாஸாவின் போது ஐந்து தக்பீர் கூறிவிட்டார். (அது பற்றி) அவரிடம் நான் (அறிவிப்பாளர்) கேட்டேன். அதற்கவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவ்வாறு தக்பீர் கூறியிருக்கிறார்கள் எனக் கூறினார். அறிவிப்பாளர் : அப்துர்ரஹ்மான் பின் அபூலைலா (ரளி) (முஸ்லிம்: 476)
- ✓ முதல் தக்பீருக்காக மாத்திரமே காதுவரை கையை தூக்கி கட்டவேண்டும், ஏனைய தக்பீர்களுக்கு கை தூக்கியதற்கு ஹதீஸ்களில் ஆதாரம் காண முடியவில்லை.
- ✓ முதல் தக்பீருக்குப் பின் சூரா பாதிஹாவை மௌனமாக ஓதுதல்.
- ➢ தல்ஹா அறிவித்தார். நான் இப்னு அப்பாஸ்(ரலி) பின்னால் நின்று ஜனாஸாத் தொழுதேன். அப்போது அவர் ஃபாத்திஹா அத்தியாயத்தை (சப்தமாக) ஓதினார். பிறகு 'நீங்கள் இதை நபிவழி என அறிந்து கொள்வதற்காகவே (சப்தமிட்டு ஓதினேன்)' என்றார். (புஹாரி : 1335)

- ✓ இரண்டாவது தக்பீருக்குப் பின் நபிகளார் மீது ஸலவாத் கூறுதல், ஸலவாத் எனும்போது நபிகளார் காட்டியதையே ஓதவும் வேண்டும், ஏனெனில் நபிகளார் வஹியின் அடிப்படையிலேயே ஸலவாத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். மேலும் சில வார்த்தை வித்தியாசங்களுடனும் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ➢ அபூ உமாமா (றழி) அவர்கள் கூறினார்கள்: முதலில் இமாம் தக்பீர் கூறுவதும், முதல் தக்பீருக்குப் பின் fபாதிஹா சூராவை மௌனமாக ஓதிவிட்டு, பினர் குர்ஆனிலிருந்து எதையும் ஓதாமல் நபியவர்கள் மீது ஸலவாத் கூறி, ஏனைய தக்பீர்களில் இறந்தவருக்காக தூய்மையான முறையில் துஆச் செய்வதும், மனதுக்குள் ஸலாம் கூறுவதும் ஜனாசாத் தொழுகையில் நபி வழியாகும். .(பைஹகீ)
- ➢ ஸஃது பின் உபாதாவின் மஜ்லிஸில் நாங்கள் அமர்திருக்க, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களி(அவ்வி)டம் வந்தனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! "'கண்ணியமும்,மகத்துவமும் உடைய அல்லாஹ் உங்களின் மீது நாங்கள் ஸலவாத்து கூற வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளான். உங்கள் மீது எவ்வாறு நாங்கள் ஸலவாத்துச் சொல்ல வேண்டும்" என பஷீர் பின் ஸஃது (ரளி) கேட்டனர். அதைக்கேட்ட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பேசாதிருந்தனர். (இதைப்பார்த்து நிச்சயமாக அவர் கேட்காதிருந்தால் நன்றாக இருந்திருக்குமே என நாங்கள் ஆசைப்பட்டோம். (அந்த அளவிற்கு அமைதியாகஇருந்து விட்டு) பின் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லை(த்)த அலா ஆலி இபுறாஷீம வபாரிக் அலா முஹம்மதின், வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா ஆலி இபுறாஷீம ஃபில் ஆலமின் இன்னக்க ஹமீதுன் மஜீது" எனக்கூறுங்கள் (என்று கூறிய பின்) ஸலாம் கூறுவது நீங்கள் (ஏற்கனவே) தெரிந்திருப்பதைப் போன்றே கூறினார்கள். அறிவிப்பவர் : அபு மஸ்ஊது அல்அன்சாரி (ரளி) முஸ்லிம்: 309)
- ✓ மூன்றாவது தக்பீருக்குப் பின் நபிகளார் ஓதிய துஆக்களை ஓத வேண்டும்.
- ➢ நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஜனாசாவுக்காக தொழுதால் அதற்காக தூய்மையாக துஆ கேளுங்கள்.' (அபூதாவுத், இப்னு மாஜாஹ்)
- ➢ அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு ஜனாஸாவிற்கு தொழுகை நடத்தினார்கள். அத்தொழுகையில் ஜனாஸாவிற்காக அவர்கள் ஓதிய துஆவை நான் மனனம் செய்து விட்டேன்.

اللَّهُمَّ اغْفِرْ لَهُ وَارْحَمْهُ وَعَافِهِ وَاعْفُ عَنْهُ وَأَكْرِمْ نُزُلَهُ وَوَسِّعْ مُدْخَلَهُ وَاغْسِلْهُ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ وَنَقِّهِ مِنَ الْخَطَايَا كَمَا نَقَّيْتَ الثَّوْبَ الأَبْيَضَ مِنَ الدَّنَسِ وَأَبْدِلْهُ دَارًا خَيْرًا مِنْ دَارِهِ وَأَهْلاً خَيْرًا مِنْ أَهْلِهِ وَزَوْجًا خَيْرًا مِنْ زَوْجِهِ وَأَدْخِلْهُ الْجَنَّةَ وَأَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِ أَوْ مِنْ عَذَابِ النَّارِ

"அல்லாஹும்மGக்பிர்லஹு வர்ஹம்ஹு வஆபிஹி வஃபு அன்ஹு, வஅக்ரிம்

நுzஜுலஹு வவஸ்ஸிஃ முத்Hகலஹு, வGக்ஸில்ஹு பில்மாஇ வஸ்ஸல்ஜி வல்பரதி வநக்கிஹி மினல் கதாயா கமா-னக்கைத்தஸ்ஸவ்பல் அப்யழ மினத்தனஸி, வஅப்தில்ஹுதாரன் கைரன் மின்தாரிஹி, வஅஹ்லன் கைரன் மின் அஹ்லிஹி வzஜவ்ஜன் மின் zஜவ்ஜிஹி, வஅத்கில் ஹுல் ஜன்னத்த வஅஇத்ஹு மின் அதாபில்கப்ரி அவ்மின் அதாபின்னார்” என அவர்கள் கூறக்கூடியவர்களாக இருந்தனர். முடிவாக நான் அந்த மய்யித்தாக இருக்கவேண்டுமென ஆசைப்பட்டேன். ( யா அல்லாஹ்! அவருக்கு பாவமன்னிப்புச் செய்து, அருளும் செய்து இன்னும் அவருக்கு ஆபியத்தையும் கொடுத்து, அவர் தங்குகின்ற இடத்தை கண்ணியமானதாக்கி வைப்பாயாக! தண்ணீர் கொண்டும், ஐஸ்கட்டி கொண்டும், ஆலங்கட்டி கொண்டும் அவரை கழுவுவாயாக! மிக வெண்மையான புடவையை அழுக்கிலிருந்து சுத்தப்படுத்துவதைப் போன்று அவரைத் தவறுகளிலிருந்து சுத்தமாக்குவாயாக! அவர் (உலகில் குடியிருந்த) வீட்டை விடச்சிறந்த வீடாக, அவரது குடும்பத்தாரை விடச்சிறந்த குடும்பமாக, அவரது மனைவியை விடச்சிறந்த மனைவியாக, அவருக்கு மாற்றிக் கொடுப்பாயாக! அவரை சுவனத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக! அவரை கப்ரின் வேதனையிலிருந்து காப்பாற்றுவாயாக! அல்லது நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுவாயாக! (முஸ்லிம்: 477)

- அபூ ஹுரைரா (றழி) கூறினார்கள்: நபியவர்கள் ஜனாசாவுக்காக தொழுதால்,

  اللهم اغفر لحينا وميتنا، وشاهدنا وغائبنا، وصغيرنا وكبيرنا، وذكرنا وأنثانا، اللهم من أحييته منا فأحيه على الاسلام، ومن توفيته منا فتوفه على الايمان، اللهم لا تحرمنا أجره، ولا تضلنا بعده ".

  (அல்லாஹும்மGக்fபிர் லிஹய்யினா, வமையிதினா, வஷாஹிதினா, வGகாஇபினா, வஸGகீரினா, வகபீரினா, வzதகரினா, வ உன்சானா, அல்லாஹும்ம லா தஹ்ரிம்னா அஜ்ரஹு, வலா துளில்லனா பஹ்தஹு) யா அல்லாஹ் எங்களில் உயிரோடிருப்பவர் மரணித்தவர், இங்கு சமூகமழித்தவர் சமூகமழிக்காதவர், சிறியவர் பெறியவர், ஆண் பெண் அனைவருக்கும் மன்னிப்பு வழங்குவாயாக, அல்லாஹ்வே, அவரது கூழியை எங்களுக்கு தடுத்துவிடாதே, அவருக்குப் பின் எங்களை வழிதவரச் செய்துவிடாதே.' என்று கூறுவார்கள். (இப்னுமாஜா, பைஹகீ)

- நபி (ஸல்) அவர்கள் ஜனாசாதொழுகைக்காக நின்றால்,

  اللهم عبدك وابن أمتك احتاج إلى رحمتك، وأنت غني عن عذابه، إن كان محسنا فزد في حسناته، إن كان مسيي ا فتجاوز عنه

  ‘அல்லாஹ்வே, உனது அடியானும் உனது அடிமையின் மகனுமாகிய இவர், உனது ரஹ்மத்தின்பால் தேவை கண்டுள்ளார், நீயோ அவரை தண்டிப்பதைவிட்டும் தேவையற்றவன். எனவே அவர் நல்லது செய்தவராக இருப்பின் அவரது நன்மையை அதிகப்படுத்திவிடு, அவர் பாவியாக இருந்தால் அதை அவருக்கு மண்ணித்துவிடு.’ என்று கூறுவார்களாம். (ஹாகிம்)

- ✓ நான்காவது தக்பீருக்குப் பின் சலாம் கொடுத்தல்.

- அப்துல்லஹ் பின் மஸ்ஊத் (றழி) கூறினார்கள்: மூன்று விடயங்கள் இருக்கின்றன, அவற்றை நபியவர்கள் செய்தார்கள், மக்கள் விட்டுவிட்டனர். அவற்றில் ஒன்று தொழுகையில் ஸலாம் கொடுப்பது போன்று ஜனாசா தொழுகையிலும் ஸலாம் கொடுப்பது. என்று கூறினார்கள். (பைஹகீ)
    - ஒரு ஸலாம் கொடுத்தால் போதும் என்ற கருத்தில் தாரகுத்னியில் வரும் ஹதீஸ் சர்ச்சைக்குறட்பட்டதாகும், அதே நேரம் சில நபித்தோழர்கள் செய்ததாக செய்திகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.
- ✓ மூன்று நேரங்களில் ஜனாசாவுக்காக தொழுவது கூடாது.
- உக்பதுப்னு ஆமிர் (றழி) அவர்கள் கூறினார்கள்: மூன்று நேரங்கள் இருக்கின்றன அவற்றில் நாங்கள் தொழுவதையும், எங்கள் ஜனாசாகளை அடக்கம் செய்வதையும் தடுத்தார்கள். சூரியன் உதிக்கும் நேரம் அது உயரும்வரை, சூரியன் நடுஉச்சியில் நிற்கும் நேரம் அது சாயும் வரை, சூரியன் மறைவதற்கு நெருங்கும் போது, அது மறையும்வரை.' (முஸ்லிம்)

❖ ஜனாசாக்களை அடக்கம்செய்வது.

- ✓ ஒரு ஜனாசாவுக்கு ஒரு முஸ்லிம் செய்யவேண்டிய கடமைகளுல் அடக்கம் செய்வது முக்கியமான ஒன்றாகும். ஏனெனில் காபிர்களைகூட நபிகளார் குழிக்குள் அடக்கியிருக்கின்றார்கள். (புஹாரி , முஸ்லிம்)
- ✓ ஜனாசாக்களை அடக்கம்செய்யும்பொது மய்யவாடிகளில் அடக்குவதே நபிவழியாக இருந்துள்ளது, அந்த அடிப்படையில் பொது இடங்களில் அடக்கம்செய்யாமல் மய்யவாடிகளில் செய்யவேண்டும். ஆனால் யுத்தகளங்களில் மரணித்தவர்களை அங்கேயே அடக்குவதும் நபிவழியாக இருந்துள்ளது. எனவே வீட்டுக்குள் அடக்குவதோ பள்ளிக்குள் அடக்குவதோ தவிர்க்கப்பட வேண்டும். இதனால் பல ஷிர்க்கான விடயங்கள் தோற்றுவிக்கப்படுவதற்கும் அது காரணமாக இருக்கும்.
- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்கள் தொழுகைகளில் ஒரு பகுதியை வீடுகளில் வைத்துக்கொள்ளுங்கள், மாறாக அவற்றை கப்ருகளாக ஆக்கிவிடாதீர்கள். (புஹாரி, முஸ்லிம்)
    - இதிலிருந்து வீட்டுக்குள் ஜனாசாக்களை அடக்கமுடியாது என்பது தெளிவா கின்றது.
- நபி (ஸல்) அவர்கள் மரணப்படுக்கையில் இருக்கும்போது,: 'அல்லாஹ் யூதர்களை சபிப்பானாக, அவர்கள் தங்கள் நபிமார்களின் அடக்கஸ்தளங்களை வணக்கஸ் தளங்களாக (மஸ்ஜித்களாக) ஆக்கினார்கள்.' என்று சொல்வார்களாம். (புஹாரி, முஸ்லிம்)

- குறிப்பு: இன்றும் பள்ளிகளுக்கு பக்கத்தில், அல்லது பள்ளிக்குள் குறிப்பிட்டவர்களை அடக்கும் ஒரு நிலை காணப்படுகின்றது அது நபிவழிக்கு முரனானதும், கண்டிக்கப்பட்டதுமாகும்.

✓ நிர்ப்பந்தமின்றி மூன்று நேரங்களில் ஜனாசாக்களை அடக்குவது கூடாது.

➢ உக்பதுப்னு ஆமிர் (றழி) அவர்கள் கூறினார்கள்: மூன்று நேரங்கள் இருக்கின்றன அவற்றில் நாங்கள் தொழுவதையும், எங்கள் ஜனாசாகளை அடக்கம் செய்வதையும் தடுத்தார்கள். சூரியன் உதிக்கும் நேரம் அது உயரும்வரை, சூரியன் நடுஉச்சியில் நிற்கும் நேரம் அது சாயும் வரை, சூரியன் மறைவதற்கு நெருங்கும் போது, அது மறையும்வரை.' (முஸ்லிம்)

✓ இரவையில் அடக்குவதும் நபிகளாரால் கண்டிக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும், நபிகளார் காலத்திலே இரவில் அடக்கம் செய்யப்பட்டு நபிகளார் கண்டிக்காத சந்தர்ப்பங்களும் இருக்கின்றன, எனவே கண்டிப்பை முற்படுத்தி முக்கிய தேவைக்கின்றி இரவில் அடக்காமல் ஒருப்பதே சிறந்தது.

➢ நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் ஒருநாள் பிரசங்கம் செய்தார்கள். (அப்போது) தனது தோழர்களில் ஒரு மனிதர் இறப்பெய்தி, பற்றாத கபன் அவருக்கு இடப்பட்டு இரவில் அடக்கமும் செய்விக்கப்பட்டு விட்டார் என்ற (விஷயத்தை) கூறிவிட்டு (இரவில் ஒரு மனிதர் இறப்பெய்திவிட்டால்) அவருக்கு தொழுகை நடத்தப்படும் வரை (இரவிலேயே) அடக்கப்படுவதைக் கண்டித்தார்கள். அவ்வாறு செய்ய (எந்த) மனிதராவது நிர்ப்பந்திக்கப்பட்டாலே தவிர. 'உங்களில் ஒருவர் தன் சகோதரருக்கு கபனிட்டால் அவரது கபனை (பற்றாக் குறையாக இடாது, நிறைவாக) அழகாக இடவும்' எனவும் கூறினார்கள். ((முஸ்லிம்: சகூகூ) அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரளி) அவர்கள்.

➢ இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார். இரவில் அடக்கம் செய்யப்பட்டவரின் கப்ரைக் கடந்து சென்ற நபி(ஸல்) அவர்கள், 'இது அடக்கம் செய்யப்பட்டது எப்போது?' எனக் கேட்டார்கள். தோழர்கள் 'நேற்றிரவு தான்' என்றதும். 'எனக்கும் சொல்லியனுப் பியிருக்கக் கூடாதா?' எனக் கேட்டார்கள். அதற்கு அம்மக்கள், 'அதை நாங்கள் இருள் சூழ்ந்த இரவில் அடக்கினோம். எனவேதான், உங்களை விழிக்கச் செய்ய விரும்பவில்லை' என்றார்கள். நபி(ஸல்) அவர்கள் தொழத்தயாராக எழுந்து நின்றார்கள். நான் உட்பட அனைவரும் அவர்களுக்குப் பின்னால் அணிவகுத்ததும் அவர்கள் ஜனாஸாத் தொழுதார்கள். . (புஹாரி : 1321)

✓ அடக்கம் செய்வதற்காக தோண்டப்படும் குழி மிருகங்கள் தோண்ட முடியாத அளவு ஆழமானதாகவும், விசாலமானதாகவும் இருக்கவேண்டும்..

- ஹஷாம் பின் ஆமிர் (றழி) கூறினாகள்: உஹது யுத்த முடிவின்போது முஸ்லிம்களில் பலர் பாதிக்கப்பட்டார்கள், மக்களுக்கு காயங்களும் ஏற்பட்டன, அல்லாஹ்வின் தூதரிடம் நாம் ' அல்லாஹ்வின் தூதரே! ஒவ்வொருவருக்கும் குழி தோண்டுவது கடினமாக உள்ளது, நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?.' என்று கேட்டோம், அதற்கு நபியவர்கள்: 'குழியை தோண்டுங்கள், அதை ஆழமாக்கி, விசாலிப்படுத்துங்கள், இரண்டு, மூன்று பேராக அடக்கம் செய்யுங்கள், குர்ஆனை அதிகம் சுமந்தவர்களை முற்படுத்துங்கள்.' என்று கூறினார்கள். (அபூதாவுத், திர்மிதி, நசாஇ, அஹ்மத்)
- ✓ குழி தோண்டும்போது குழியின் வலப்பக்கமாக சிரிய குழியைத் தோண்டுவதும் நபிவழியே, தோண்ட முடியுமாக இருந்தால் அப்படித்தான் செய்யவும்வேண்டும்.
- ஸஃத் பின் அபீ வக்காஸ் என்ற நபித் தோழர் மரணிக்கும்போது, 'எனக்காக நீங்கள் நபிகளாருக்கு செய்யப்பட்டது போன்று, குழிக்குள் சிறிய குழியை தோண்டி, (அடக்கிய பின் என்கப்ரின் மீது) கல்லை நட்டுங்கள்.' என்று கூறினார்கள். (முஸ்லிம், அஹ்மத்)
- ✓ அடக்கம் செய்யும்போது இரண்டு, மூன்று பேரை சேர்த்தியும் அடக்கலாம்.
- ஹஷாம் பின் ஆமிர் (றழி) கூறினாகள்: உஹது யுத்த முடிவின்போது முஸ்லிம்களில் பலர் பாதிக்கப்பட்டார்கள், மக்களுக்கு காயங்களும் ஏற்பட்டன, அல்லாஹ்வின் தூதரிடம் நாம் ' அல்லாஹ்வின் தூதரே! ஒவ்வொருவருக்கும் குழி தோண்டுவது கடினமாக உள்ளது, நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?.' என்று கேட்டோம், அதற்கு நபியவர்கள்: 'குழியை தோண்டுங்கள், அதை ஆழமாக்கி, விசாலப்படுத்துங்கள், இரண்டு, மூன்று பேராக அடக்கம் செய்யுங்கள், குர்ஆனை அதிகம் சுமந்தவர்களை முற்படுத்துங்கள்.' என்று கூறினார்கள். (அபூதாவுத், திர்மிதி, நசாஇ, அஹ்மத்)
- ✓ ஜனாசாவை குளிக்குள் இரக்கிவைப்பதற்காக யாரும் இறங்களாம், ஆனால் நபிகளார் அதற்கு நிபந்தனையாக அன்றைய இரவு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாதவரை தேர்வுசெய்தார்கள் என்பதை பார்க்கமுடிகின்றது, எனவே இதையும் நாம் ஒழுக்கமாக எடுக்கவேண்டும்.
- அனஸ் (றழி) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் நபிகளாரின் மகள் உம்மு குல்சூம் (றழி) அவர்களின் ஜனாசாவில் கலந்துகொண்டோம், நபியவர்கள் கப்ரின் மீது அமர்ந்திருந்தார்கள், , அவர்களது கண்களில் கண்ணீர் வடிவதை நான் பார்த்தேன், அப்பொது நபியவர்கள்: 'நேற்றிரவு குடும்ப வாழ்வில் ஈடுபடாத யாரும் உங்களில் இருக்கின்றாரா?' என்று கேட்க, அபூ தல்ஹா (றழி) அவர்கள் நான் இருக்கின்றேன்,

என்று கூற, நபியவர்கள் அவர்களை கப்ருக்குள் இறங்குமாறு ஏவ, அவர்கள் கப்ருக்குள் இறங்கினார்கள். (புஹாரி, அஹ்மத்)

- ✓ கப்ருக்குள் ஜனாசாவை இறக்கும்போது கப்ரின் கால் பகுதியால் இறக்குவதும் கவனிக்கவேண்டியதே.
- ➢ ஹாரிஸ் என்ற நபித் தோழர் மரணிக்கும்போது, அப்துல்லாஹ் பின் யஸீதை தொழுவிக்குமாறு வஸிய்யத் செய்தார், அவர் தொழுகை நடாத்திவிட்டு, அவரை கப்ரின் கால்மாட்டினால் கப்ருக்குள் வைத்துவிட்டு, இது நபிவழியில் உள்ளது எனக் கூறினார். (அபூதாவுத்)
- ✓ ஜனாசாவை கப்ருக்குள் வைப்பவர் நபிவழியில் வந்த துஆவை சொன்னவராக வைக்கவேண்டும், மாறாக நபிவழியில் இல்லாதவைகளை கூறியவன்னமோ, பாங்கு இகாமத் சொன்னவாரோ பித்அத்களை செய்து வைக்கக்கூடது.
- ➢ நபியவர்கள் ஜனாசாவை கப்ருக்குள் வைத்தால், بِسْمِ اللَّهِ وَعَلَى سُنَّةِ رَسُولِ اللَّهِ என்று கூறுவார்கள். என இப்னு உமர் (றழி) அவர்கள் கூறினார்கள். (அபூதாவுத்)
- ➢ இன்னும் சில அறிவிப்புக்களில் باسم الله وعلى ملة رسول الله என்று வந்துள்ளது. (திர்மிதி, இப்னுமாஜா)
- ✓ ஜனாசாவை கப்ருக்குள் வைத்த பின்பு மூன்றுபிடி மண்போடுவதும் நபி வழியாகும்.
- ➢ அபூ ஹுரைரா (றழி) அவர்கள் கூறினார்கள்: நபியவர்கள் ஒரு ஜனாசாவுக்காக தொழுதுவிட்டு, அந்த மையித்திடம் வந்து, தலைப் பக்கத்தால் மூன்றுபிடி மன்னை அள்ளிப்போட்டார்கள். (இப்னுமாஜா)
- ✓ அடக்கம்செய்த பின் மன்னை ஒருசான் அளவுக்கு மட்டப்படுத்துவதும், கப்ருக்கு மேல் ஒரு கல்லை அடையாலமாக வைப்பதும் நபிவழியாகும், மறாக மாற்று மதக் கலாச்சாரத்தைப் பின்பற்றி வெள்ளைக் கொடிகளை நட்டுவதோ, மரங்களை நட்டுவதோ பிழையான, பித்அத்தான விடயங்களாகும்..
- ➢ ஜாபிர் (றழி) அவர்கள் கூறினார்கள்: நபியவர்களுக்காக குழிக்குள் சிறு குழி தோண்டப்பட்டது, அவர்களது கப்ர் பூமியைவிட ஒரு சான் அளவு உயர்த்தப்பட்டது. (இப்னு ஹிப்பான், பைஹகீ)
- ➢ முத்தலிப் என்ற ஒரு நபித்தோழர் கூறினார்கள்: உஸ்மான் பின் மழ்ஊன் (றழி) அவர்கள் மரணித்தபோது, அவர்களது ஜனாசாவை அடக்கிய நபியவர்கள், ஒரு நபித்தோழருக்கு ஒரு கல்லை எடுத்துவருமாரு ஏவினார்கள். அவரால் கல்லை தூக்கமுடியாதபோது நபியவர்கள் சென்று அக்கல்லை தூக்கி வந்து, கப்ரின் தலைமாட்டில் வைத்துவிட்டு, ‘இதன்மூலம் என் சகோதரரின் கப்ரை நான் தெறிந்துகொண்டு, எனது குடும்பத்தில் மரணிப்பவர்களை அதன் பக்கத்தில் அடக்கம் செய்வேன்.’ என்று கூறினார்கள். (அபூதாவுத். பைஹகீ)

- ✓ கப்ருக்கு மேல் மன்னை போடும்போது منها خلقنا كم، وفيها نعيدكم، ومنها تخريجكم تارة أخرى இந்த வசனத்தை ஓதுவதோ, மரத்துக்கு தண்ணீர் ஊற்றும் போது ஓதுவதோ நபிவழிக்கு அப்பால்பட்ட ஒரு பித்அத்தாகும். ஆப்படி ஒரு ஹதீஸ் அஹ்மதில் வந்திருந்தாலும் அது மிகவும் பலவீனமான செய்தியாகும்.
- ✓ மரம் நட்டுவதைப் பொருத்தவரை நபியவர்கள் வஹியின் மூலம், தண்டிக்க ப்படுவதை அறிந்தே அதை செய்தார்கள். எனவே அடக்கம் செய்யப்பட்டவர் என்ன நிலையில் உள்ளார் என்பது தெரியாத நாங்கள் அப்படி செய்வது நாங்களும் நபித்துவத்தை வாதிடுவதற்கு சமனாகும். ஏனெனில் அதுவல்லாமல் நபிகளார் பகீஇல் எத்தனையோ ஜனாசாக்களை அடக்கினார்கள், ஆனால் நபிகளார் அப்படி செய்யாதபோது நாங்கள் செய்தால் அது நபிகளாரை மிஞ்சுகின்ற செயலாகும். அல்லாஹ் அப்படிப்பட்ட செயலிலிருந்து எம்மைக் காக்கவேண்டும்.
- ➢ நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் அல்லது மக்காவில் ஒரு தோட்டத்துக்கு அருகாமையால் நடந்து சென்றார்கள், அப்போது கப்ரில் தண்டிக்கப்படும் இருவரின் சத்தத்தைக் கேட்டார்கள், அப்போது நபியவர்கள், அந்த இரண்டுபேரும் தண்டிக்கப்படுகின்றனர், பெரும் பாவங்களுக்காக அல்ல, மாறாக அவ்விருவரில் ஒருவர் சிறுநீர் கழிக்கும் போது மறைக்கமல் இருந்தார், மற்றவர் கோள் சொல்லித்திரிபவராக இருந்தார்' என்று கூறிவிட்டு, ஒரு ஈத்தம் பாலையை கொண்டு வரச் சொல்லி, அதை இரண்டாக கிழித்து, ஒவ்வொரு கப்ருக்கு மேலாலுல் வைத்தார்கள், காரணம் கேட்கப்பட்டபோது, (அந்த இரு துண்டுகளும்) காயாமலிருக்கும்வரை அவ்விருவருக்கும் (தண்டனை) இழகுபடுத்தப்படலாம்.' என்று கூறினார்கள். என இப்னு அப்பாஸ் (றழி) கூறினார்கள். (புஹாரி, முஸ்லிம்)
- ✓ அடக்கம் செய்த பின் தல்கீன் (கப்ராலிக்கு சில கேள்விகளும், பதில்களும்) சொல்லிக்கொடுக்கப்படுகின்றன், அதற்கு நபிவழியில் ஸஹீஹான சான்றுகள் எதுவும் இல்லை எனவே அதுவும் பித்அத்தாகும். அனால் நபிகளார் கப்ருக்குப் பக்கத்தில் நின்று, 'உங்கள் சகோதரருக்காக மன்னிப்பு தேடுங்கள்,மேலும் கேள்விகளுக்கு பதில் சொல்ல உறுதிப்பாட்டையும் கேளுங்கள், ஏனெனில் அவர் தற்போது விசாரிக்கப்படுகின்றார்.' என்று கூறுவார்களாம். (அபூதாவுத், பைஹகீ) இதிலிருந்து இன்று நடப்பது போன்று நபிகளார் துஆ கேட்க ஸஹாபாக்கள் ஆமீன் சொல்லவுமில்லை என்பதும் தெழிவாகின்றது. எனவே இன்று கப்ரடியில் நடக்கும் கூட்டு துஆவும் பிதத்தாகும்.
- ✓ மேலும் நபிகளார் அடக்கம் செய்த பின்பு கப்ரடியில் ஒரு உரையும் நிகழ்த்தியுள்ளார்கள் எனவே அந்த சுன்னாவையும் நடைமுறைப் படுத்தவேண்டும்.

- அலி (றழி) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் பகீஇல் ஒரு ஜனாசாவில் கலந்து கொண்டோம், அப்போது எங்களிடம் நபியவர்கள் வந்து, அமர்ந்தார்கள், நாங்களும் அவருக்கு சூழாக அமர்ந்தோம்,நபிகளாரது கையில் ஒரு குச்சி இருந்தது, அதனால் பூமியில் குத்தியவர்களாக: 'உங்களில் இருக்கும் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் சுவர் கத்தில் அல்லது நரகத்தில் அவர்களது இடம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது, அல்லது சீதேவியா, மூதேவியா என்று எழுதப்பட்டுள்ளது.' என்று கூறினார்கள், அப்போது ஒரு தோழர், 'அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் அந்த முடிவை நம்பி வணக்கங்களை விட்டுவிடவா?,' என்று கேற்க, நபியவர்கள்: யார் சீதேவி என எழுதப்பட்டுள்ளாரோ, அவருக்கு அதற்குறிய வணக்கம் இழகுபடுத்தப்படும், மேலும் யார் மூதேவி என எழுதப்பட்டுள்ளாரோ அவருக்கு அதற்குறிய வணக்கம் இழகுபடுத்தப்படும்.' என்று கூறிவிட்டு,٧) فَأَمَّا مَنْ أَعْطَى وَاتَّقَى (٥) وَصَدَّقَ بِالْحُسْنَى (٦) فَسَنُيَسِّرُهُ لِلْيُسْرَى (யார் அல்லாஹ்வுக்காக கொடுத்து, அவனை பயந்து, தானதர்மமும் செய்கின்றாரோ அவருக்கு நாம் சுவன வழியை இழகுபடுத்துவோம். 92:5,6,7)என்ற வசனங்களை ஓதிகாட்டினார்கள். (புஹாரி, முஸ்லிம்)
- கப்ரடியில் உரை நிகழ்த்திய செய்தி அஹ்மதில் விரிவாக வந்துள்ளது.
- ✓ அடக்கம் செய்த, கப்ருக்குள் வைத்த ஒரு ஜனாசாவை தேவைக்காக வெளியில் எடுக்கவும் முடியும்.
- ஜாபிர் (றழி) அவர்கள் கூறினார்கள்: அப்துல்லஹ் பின் உபை (முனாfபிக்) யை கப்ருக்குள் வைத்தபின் நபிகளார் அவ்விடம் வந்து, அவனை வெளியில் எடுக்குமாறு ஏவினார்கள், வெளியேற்றப்பட்டபின் அவரின் மீது நபிகளார் தன் உமில்நீரை தடவிவிட்டு, தன் ஆடையை அவருக்கு அணிவித்து, தொழுகையும் நடத்தினார்கள். (புஹாரி, முஸ்லிம்)
- ✓ ஜனாசாவை அடக்கம்செய்தபின் குடும்ப உறவுகள் வரிசையாக நிற்க, வந்தவர்கள் முஸாபஹாச் செய்கின்ற ஒரு வழிமுறையும் இன்று இருந்து வருகின்றது, அதுவும் நபிகளாரது வழிமுறைகளில் காணமுடியாத ஒன்றாகவே இருக்கின்றது, எனவே இதுபோன்ற விடயங்களும் தவிர்க்கப்படவேண்டும். ஆனலும் கவலையில் இருக்கும் அந்த மையித்தின் உறவினருக்கு ஆருதல் கூருவது நபிவழியாகும்.
- நபிகளார் தம் மகளின் பிள்ளை மரணித்தபோது,

  '" إن لله ما أخذ، و (لله) ما أعطي، وكل شئ عنده إلى أجل مسمى فالتصبر، ولتحتسب ".

  எடுத்ததும், கொடுத்ததும் அல்லாஹ்வுக்குறியதே, ஒவ்வொன்றும் அவனிடம் தவனை குறிப்பிடப்பட்டதாகவே இருக்கின்றது, எனவே பொறுமையாக இருந்து, நன்மையை எதிர்பார்க்கட்டும்.' என்று சொல்லி அனுப்பினார்கள் (புஹாரி, முஸ்லிம்)

- ✓ மரண வீட்டில் சாப்பாட்டுக்காக குறிப்பிட்ட சில நாட்களில் ஒன்று கூடுவதும், கத்தம் என்ற பெயரில் குர்ஆன் தமாம் செய்வதும் நபிவழியில் இல்லாத வைகளாகும். சிலர் நல்லதைத்தானே செய்கின்றோம் என்பார்கள், முதல் விடயம் நபிகளார் காட்டாதது எப்படி நல்லதாகும் என்பதே, இரண்டாவது நபிகளார் காலத்தில் முலுக் குர்ஆனையும் காணாமலே பலர் மரணித்துள்ளனர். குர்ஆன் தமாம் செய்வதாக இருந்தால் அவர்களுக்கே நபிகளார் செய்திருக்கவேண்டும் ஆனால் நபிகளார் செய்யவில்லை, எனவே நபிகளார் செய்யாத பித்அத்தை நாமும் செய்யக்கூடாது.

***M.S.M MURSHID ABBASI MASJID ABEEBAKR, HAPUGASTHALAWA***

***14-09-2011 _ 23-11-2011***